Registered as a news paper.

பக்கங்கள்: பதினான்கு

விலை: ரூபா 7.00

நமது

# ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

இன்றைய நாகரீகம்! நாளைய நாகரீகம்!

மகாராசி சில்க்ஸ்

மங்கல நிகழ்வுகளுக்கு மகாராசியான ஸ்தாபனம்

மகாராசி சில்க்ஸ்

59, நவீனசந்தை உட்புறம், யாழ்ப்பாணம்.

T.P.No : 0777286247.

மலர் : 02 திருவள்ளுவர் ஆண்டு: 2035 ஆடி 13 ஆம் நாள், ஹிஜ்ரி 1427 ஜ.ஆகிர் 09 (28.07.2004) புதன்கிழமை இதழ் :299

# இடைக்கால நிர்வாக யோசனைப்படி

# புலிகளுடன் பேச்சு நடத்த தயாராம்!



## ஹெல்கிசனிடம் ஜனாதிபதி தெரிவிப்பு!



(கொழும்பு)

**விடுதலைப் புலிகளால் சமர்ப்பிக்கப்பட்ட இடைக்கால நிர்வாகசபை தொடர்பாக, அவர்களுடன் பேசுவதற்குத் தமது அரசாங்கம் விருப்ப ஆர்வத்துடன் உள்ளதாக ஜனாதிபதி சந்திரிகா தெரிவித்தார்.**

**நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடனான சந்திப்பின்போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.**

நேற்று நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுக்கும், ஜனாதிபதி சந்திகாவுக்கும் இடையில் இடம்பெற்ற சந்திப்பின்போது விதார் ஹெல் கிசன், தான் கிளிநொச்சியில் விடுதலைப் புலிகளின் அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வனுடன் கலந்துரையாடிய விடயங்கள் தொடர்பாக ஜனாதிபதிக்கு எடுத்து விளக்கினார்.

இதன்போது - விடுதலைப் புலிகள் போர் நிறுத்த உடன்படிக்கையைத் தொடர்ந்து கடைப்பிடிக்க உறுதியுடன் இருப்பதாகவும், ஆனால், தம்மால் சமர்ப்பிக்கப் பட்ட இடைக்கால நிர்வாகசபை தொடர்பான திட்ட வரைபை பேச்சுக்களுக்கான (12 ஆம் பக்கம் பார்க்க)

# வடக்கு - கிழக்கு அபிவிருத்தியில் விடுதலைப் புலிகள் முக்கிய தரப்பு!

## உலகவங்கிப் பிரதிநிதி தெரிவிப்பு

(கொழும்பு)

வடக்கு - கிழக்கில் அபிவிருத்தி தொடர்பான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படும்போது, விடுதலைப் புலிகளை முக்கிய தரப்பினராக உலகவங்கி கருதுகிறது.

இவ்வாறு உலகவங்கியின் இலங்கைக்கான பணிப்பாளர் பீற்றர் ஹரோல்ட் தெரிவித்தார்.

உலகவங்கி இந்த ஆண்டு முன்னெடுக்கப்படவேண்டிய திட்டங்கள் அடங்கிய அறிக்கையின் தமிழ்ப் பிரதியை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்திருந்தது.

இந்த அறிக்கையை விடுதலைப் புலிகளுக்கு அனுப்பிவைத்தமையை, தேசப்பற்றுள்ள தேசிய இயக்கம் கண்டித்து, அனுப்பிவைத்த கடிதத்துக்கு பதிலளிக்கும் போதே பீற்றர் ஹரோல்ட் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில் -

(12 ஆம் பக்கம் பார்க்க)

# ஜே.வி.பி. வசமிருந்த அமைச்சின் பொறுப்புக்கள் திடீரெனப் பறிப்பு!

## ஜனாதிபதியின் நடவடிக்கையால் ஜே.வி.பி அதிருப்தி

(கொழும்பு)

ஜே.வி.பி வசமுள்ள விவசாயத்துறை அமைச்சின் சில பொறுப்புக்களை - ஜனாதிபதி சந்திரிகா வர்தமானி அறிவித்தல் மூலம், மைத்திரிபால சிறிசேனாவின் வசம் உள்ள அமைச்சுக்கு மாற்றியுள்ள விவகாரம் குறித்து, ஜே.வி.பி கடும் அதிருப்தி வெளியிட்டிருக்கிறது.

கடந்த 12 ஆம் திகதி ஜனாதிபதி சந்திரிகா வெளியிட்ட வர்த்தமானி அறிவித்தலில் - விவசாய அமைச்சு வசம் இருந்த தேசிய நீர்ப்பாசனக் கொள்கை தொடர்பான விடயத்தை, ஆற்றுப்படுகை அமைச்சர் மைத்திரிபால சிறிசேனாவின் அமைச்சின் கீழ் கொண்டுவர பொறுப்பு மாற்றம் செய்யப்பட்டது.

இந்த மாற்றங்கள் குறித்து ஆளும் கூட்டணியில் உள்ள ஜே.வி.பியிடம் ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க கலந்தாலோசனை செய்யவில்லை. (12 ஆம் பக்கம் பார்க்க)

நோர்வேயின் முக்கிய அறிவிப்பு

# கொழும்பு நகரின் பாதுகாப்பை பலப்படுத்த ஜனாதிபதி உத்தரவு!

## பாதுகாப்பு மற்றும் பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சுகளின் செயலர்கள் நேற்று அறிவிப்பு!

(கொழும்பு)

கொழும்பு நகரத்தின் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்குரிய சகல நடவடிக்கைகளையும் எடுக்கும்படி ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்க விசேட உத்தரவைப் பிறப்பித்திருப்பதாகவும் -

இதன் அடிப்படையில் இன்னும் ஒரு வார காலப் பகுதியில் பாதுகாப்பு நடவடிக்கைகள் முற்றாக மறுசீரமைக்கப்படும் என்றும் -

கொழும்பில் நேற்று நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டில் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் சிறில் ஹேரத் மற்றும் பொது மக்கள் பாதுகாப்பு மற்றும் சட்டம் ஒழுங்குகள் அமைச்சின் செயலாளர் திலக் ரணவிராஜ ஆகியோர் தெரிவித்தனர்.

அந்த மாநாட்டில் அவர் மேலும் தெரிவிக்கையில் -

கொட்டாவவில் சுட்டுக்கொல்லப்பட்ட கருணா அணியியைச் சேர்ந்தவர்கள் உட்பட எட்டுப் பேரின் கொலையுடன் விடுதலைப் புலிகள் நேரடியாக சம்பந்தப்பட்டுள்ளனர் என்பதற்குரிய எந்த ஆதாரமும் கிடைக்கவில்லை. இதனால் அரசாங்கம் எந்த முடிவுக்கும் வரமுடியாது.

இதுவரை மூன்று பேருடைய விசாரணைகள் முடிவடைந்துள்ளன. இதன்மூலம் உயிரிழந்தவர்கள் கருணா அணியைச் சேர்ந்தவர்கள் என முடிவுசெய்துள்ளோம். உயிரிழந்த ஏனையோர் பற்றிய விசாரணைகள் நடைபெற்றுக்கொண்டிருக்கின்றன.

இந்தக் கொலைச் சம்பவத்திற்கும் விடுதலைப் புலிகளுக்கும் நேரடித் தொடர்பிருப்பதாக பொலிஸார் இன்னமும் கூறவில்லை. விடுதலைப் புலிகளுக்குத் தொடர்பிருப்பதாகக் கூறுபவர்கள் அதனை நிரூபிக்கவும் வேண்டும்.

(12 ஆம் பக்கம் பார்க்க)

## நோர்வேயின் முக்கிய அறிவிப்பு நாளை வெளியாகும்!

(கொழும்பு)

இலங்கை இனப்பிரச்சினை விவகாரம் குறித்து நோர்வே அரசாங்கம் நாளை முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிடவுள்ளதாக, கொழும்பு இராஜதந்திர வட்டாரங்களில் இருந்து தெரியவருகிறது.

ஆளும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்திற்கும்- தமிழீழ விடுதலைப் புலிகளுக்கும் இடையில் இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை மீள

(12 ஆம் பக்கம் பார்க்க)

## மட்டுவில் விபத்தில் இளைஞர் பலி; சகோதரன் படுகாயம்!

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி - பன்றித்தலைச்சி அம்மன் கோவிலுக்கு அருகாமையில் இடம்பெற்ற மோட்டார் சைக்கிள் - லொறி விபத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்ததுடன் அவரது சகோதரர் படுகாயமடைந்தார்.

மட்டுவில் பன்றித்தலைச்சி அம்மன் கோவிலடியில் நேற்று அதிகாலை 5.30 மணியளவில் இடம்பெற்ற இந்த விபத்துப்பற்றி

(12 ஆம் பக்கம் பார்க்க)



இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை...
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021-2223891, 2226297, 077-2349999, 011-2372952-3, 011-2360290, 011-2360291
email: jaffna@expoavi.com, reservations@expoavi.com.
எக்ஸ்போ எயார் வான்வெளியில் உங்கள் நண்பன்...
EXPOAIR
Your friend in the skies...


மகனின் பணம் உடன் கிடைத்ததால் மனைவிக்கு பேருதவி!
என் மனைவியின் அறுவைச் சிகிச்சையை தாமதமின்றி செய்து அவரின் உயிரை காப்பாற்ற உரிய நேரத்தில் பணம் கிடைத்ததற்கு செலான் வங்கிக்குத்தான் நன்றிகூற வேண்டும். கனடாவிலுள்ள வெஸ்டன் யூனியன்மூலம் செலான் வங்கிக்கு பணத்தை அனுப்புமாறு மகனுக்கு போன் பண்ணினேன். மறுநாளே பணம் வந்ததும் செலானில் எனது கணக்குக்கு மாற்றிவிட்டு பாதுகாப்பாக எடுத்து வந்தோம். ஒரு சோலியும் இல்லை. வங்கியில் பணத்தை பெறும்போது கட்டணம் எதுவும் அறவிடாமல் ஒரேதடவையில் முழுத்தொகையையும் தந்துவிடுகிறார்கள். வங்கியில் மாத்திரமே பாதுகாப்பாகவும் துரிதமாகவும் நம்பகமாகவும் இச்சேவையை பெறமுடியும்.
ஹொட்லைன்: 2452666
HOLMES POLLARD & STOTT
• நம்பகமானது • பாதுகாப்பானது • அதி வேகமானது
WESTERN UNION பணப் பரிமாற்றல்
உலகளாவிய ரீதியில் பணம் அனுப்பவும் பெறவும் அதிதுரித வழி
PEOPLE'S BANK
மக்கள் மனமறிந்த வங்கி
மக்கள் வங்கி
செலான் வங்கி
அன்புடன் அரவணைக்கும் வங்கி

# இலங்கையின் சமாதான முயற்சிக்கு அதிக காலத்தை வீணடிக்கமுடியாது

## ஜப்பானிய விசேட தூதுவர் அகாஷி

இடைநிறுத்தப்பட்டுள்ள சமாதானப் பேச்சுக்களை விரைவில் ஆரம்பிக்கப்படவேண்டும். இதற்காகச் சர்வதேச சமூகம் அதிக காலத்தை வீணடிக்கமுடியாது என ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷி அகாஷி தெரிவித்தார்.

சண்டேலீடர் பத்திரிகையின் ஆசிரியருக்கு ஜப்பானிய விசேட தூதுவர் யசூஷிஅகாஷி அளித்த பேட்டியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகள் கடநத சில மாதங்களாக தடைப்பட்டுள்ளன. அதில் இந்தச் சமாதானப் பேச்சுவார்த்தைகள் மீண்டும் ஆரம்பிக்கப்பட வேணடுமென்பதே எமது நிலைப் பாடாகும்.

இலங்கையின் சமாதானப் பேச்சுவார்த்தைகளின் முன்னேற்றம் கருதி, இலங்கைக்குப் பொருளாதார ரீதியாக உதவத்தயாராகவுள்ளோம். இதனால், இலங்கையின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும்.



உலகவங்கி சர்வதேச நாணய நிதியம் போன்று உதவ வழங்கும் அமைப்புக்கள் இலங்கையின் எதிர்காலம் பற்றி அக்கறை கொண்டுள்ளன என்று யசூஷி அகாஷி மேலும் தெரிவித்தார்.



திருகோணமலை - கிண்ணியா நீரோடைப் பாலத்துக்கான அடிக்கல் நினைவுப் படிகத்தைப் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ திறந்துவைத்துப் பார்வையிடுவதைப் படத்தில் காணலாம்.

படம் - சசிக்குமார்.

# கிழக்கின் பாதுகாப்பை அதிகரிக்க உத்தரவு!

(கொழும்பு)

கிழக்கு மாகாணத்தின் பாதுகாப்பை அதிகரிக்குமாறு கிழக்கு மாகாணப் பிராந்தியத்துக்குப் பொறுப்பான பிரதிப் பொலிஸ் மா அதிபர் நெவில் விஜயசிங்க உத்தரவிட்டுள்ளார்.

கொட்டாவ பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் அதிகாலை கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் உட்பட எட்டுப்பேர் கொல்லப்பட்ட சம்பவத்துடன் தொடர்புடையவர்கள் கிழக்கு மாகாணத்துக்கு வந்துள்ளதை அடுத்தே, இந்தப் பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதாக நெவில் விஜயசிங்க தெரிவித்தார்.

கிழக்கின் பாதுகாப்புக்கு அமைய, வீதித்தடைகள் மற்றும் சோதனை நடவடிக்கை ஆகியவற்றின் எண்ணிக்கை அதிகரிக்கப்பட்டுள்ளதாக அவர் மேலும் தெரிவித்தார்.

# நாடுமுழுவதும் பாதுகாப்பை பலப்படுத்துவதற்கு தீர்மானம்

## பாதுகாப்பு அதிகாரிகள் கூட்டத்தில் தீர்மானம்

(கொழும்பு)

கொழும்பிலும், நாட்டின் ஏனைய பகுதிகளிலும் பாதுகாப்பு ஏற்பாட்டைப் பலப்படுத்த நடவடிக்கை எடுப்பதென நேற்றுமுன்தினம் இடம்பெற்ற பாதுகாப்பு அதிகாரிகளின் கூட்டத்தில் முடிவெடுக்கப்பட்டது.

பாதுகாப்பு அமைச்சில் சுமார் மூன்று மணித்தியாலங்களாக நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் - பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சின் செயலர் திலக் ரணவிராஜ, பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா மற்றும் கொழும்பு மாவட்டத்துக்குப் பொறுப்பான இராணுவக் கட்டளை அதிகாரி ரஞ்சித் சில்வா மற்றும் நான்கு பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

கொட்டாவையில் இடம்பெற்ற சம்பவத்தை அடுத்து, பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளதாக இந்தக் கூட்டத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, அதனைச் சமாளிக்கும் 15 அம்சத் திட்டங்களை நடைமுறைப்படுத்துவது என்ற தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

இதற்காகப் போர்நிறுத்த உடன்பாட்டுக்குப் பின்னர் கொழும்புக்கு வந்தவர்கள்மீது விசேட கவனம் செலுத்துவது என்று இணங்கிக் கொள்ளப்பட்டது.

மக்கள் சட்டவிரோத செயல்கள் தொடர்பாக பொலிஸாருக்குத் தகவல்கள் கொடுப்பதற்காக ஏற்கனவே இருந்த 19 என்ற இலக்கங்களுக்குப் பதிலாக 119 என்ற இலக்கங்களை அறிமுகப்படுத்துவது எனவும் தீர்மானிக்கப்பட்டது.

திடீர் வீதிச் சோதனைகளை மேற்கொள்ளல், ஒரு நாள் கடவுச் சீட்டுக்களை விநியோகிக்கும் போது கவனமான செயற்பாட்டை எடுத்தல்போனற தீர்மானங்களும் இந்தக் கூட்டத்தில் மேற்கொள்ளப்பட்டன.

சட்டம் அரசியலமைப்புக்கு உட்பட்ட வகையில், கடல் மற்றும் தரை வழிப் பாதுகாப்பை உறுதிப்படுத்துவது என்ற முடிவு இந்தக் கூட்டத்தில் எடுக்கப்பட்டது.

# அரசியல் பழிவாங்கலுக்கு உட்பட்டோருக்கு உதவிகள் வழங்குமாறு வேண்டுகோள்!

1977 ஆம் ஆண்டிலிருந்து அரசியல் பழிவாங்கல்களுக்கு உட்படுத்தப்பட்டு, இதுவரை உதவிகள் கிடைக்காத அனைவருக்கும் உடனடியாக உதவிகள் வழங்கவேண்டுமெனவும், அரச சேவையில் உறுதிப்படுத்தப்படாத ஊழியர்களது தொழில்கள் உறுதிப்படுத்தப்பட வேண்டுமெனவும், அனைத்து இலஙகைத் தொழிற்சங்க கூட்டமைப்பு அரசிடம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நாடாளுமன்றின்மூலம் ரத்துச்செய்யப்படவேண்டிய மக்கள் விரோத அனைத்து ஆணைச்சட்டங்களும், விரைவாக ரத்துச்செய்யப்படுதல், அரச ஊழியர்களது சம்பளக் கடனை விரைவுபடுத்தல் மற்றும் 2200 ரூபா கொடுப்பனவை அரச சேவை ஊழியர்களது சம்பளத்தோடு சேர்த்துக் கொள்ளல் போன்ற வேண்டுகோள்களை அந்தக் கூட்டமைப்பு அரசுகது சமர்ப்பித்துள்ளது.

நாடாளுமன்றின் பெரும்பான்மை எப்படி இருந்தாலும், மக்கள் பெரும்பான்மையின் விருப்பம் மற்றும் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றுவது அரசாங்கத்தின் பொறுப்பாகும்.

எமது கோரிக்கைகள் தொடர்பாக அரசாங்கம் நல்லமுடிவைத் தெரிவிக்காதுவிட்டால், வேண்டுகோளை வெற்றிபெறச்செய்ய தொழிற்சங்கம் செயற்பாட்டுக்கு செல்லுமென கூட்டமைப்பின் செயலாளர் சுமதிபால மானவரு தெரிவித்தார்.

# அமெரிக்க ராஜாங்க அமைச்சர் இலங்கைக்கு வருகின்றார்!

(கொழும்பு)

அமெரிக்க ராஜாங்கத் திணைக்களத்தின் தெற்காசியாவுக்கான பிரதான பிரதி ராஜாங்க செயலாளர்-டொனால்ட் ஏ காம்ப் இந்த வாரம் இலங்கைக்கு விஜயம் செய்யவுள்ளார்.

தெற்காசிய நாடுகளுக்கான வழமையான ஒரு பயணமாக இது கருதப்படுகிறது. இருப்பினும், அவர் இலங்கையில் தங்கியிருக்கும்போது பல உயர்மட்ட அரசியற் தலைவர்கள், மக்கள் பிரதிநிதிகள் உட்பட தனியார் நிறுவன பிரதிநிதிகளையும் சந்திப்பார்.

இதன்பின்னர் இந்தியா சென்று, புதுடில்லியில் பல உயர்மட்டப் பிரதிநிதிகளைச் சந்திக்கவுள்ளார். இதேவேளை - தற்போதைய அரசியல் நெருக்கடி நிலையில் இவரது விஜயம் முக்கியத்துவம் பெறுவதாகக் கருதப்படுகிறது. (01)

## ஆட்பதிவுத் திணைக்கள அதிகாரிகளை

# 5 வருடத்துக்கு ஒருமுறை இடம்மாற்ற ஆலோசனை

ஆட்பதிவு திணைக்களங்களில் கடமையாற்றும் உயர் அதிகாரிகளை ஐந்து வருடங்களுக்கு ஒரு தடவை வேறு திணைக்களங்களுக்கு மாற்றுவதற்கு அரசாங்கம் ஆலோசித்துவருகிறது.

ஆட்பதிவு திணைக்களத்தின் அதிகாரிகளின் உதவியுடன் தேசிய அடையாள அட்டைகளைப் போலியான முறையில் தயாரிப்பது தொடர்பாக - மக்கள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் சமாதானம் தொடர்பான அமைச்சு கிடைத்த முறைப்பாட்டை அடுத்து, அரசு ஆலோசித்துவருவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அண்மையில் - கொள்ளுப்பிட்டியில் பெண்ணொருவர் தற்கொலைத் தாக்குதலை மேற்கொண்டபோது, பெண்ணிடமிருந்து பெறப்பட்ட அடையாள அட்டை தொடர்பான விசாரணைகளை ஆரம்பிப்பதற்கு முன்னர் இந்தச் சம்பவம் குறித்த முறைப்பாடுகள் தமக்கு கிடைத்துள்ளதாகத் திணைக்களத்தின் செயலாளர் திலக் ரணவிராஜா தெரிவித்தார்.

# 15 ஆயிரம் பட்டதாரிகளுக்கு அடுத்தமாதம் நியமனங்கள்!

## ஜனாதிபதி வழங்குவார்

வேலையற்ற பட்டதாரிகள் 30 ஆயிரம் பேருக்கு அரச திணைக்களங்களில் வேலை வாய்ப்புக்களை வழங்கும் பொருட்டான நியமனக் கடிதங்களை வழங்கும் தேசிய நிகழ்ச்சி - ஓகஸ்ட் 2 ஆம் திகதி ஜனாதிபதி தலைமையில் ஆரம்பித்து வைப்பதற்கு அரசு நடவடிக்கை எடுத்துள்ளது.

இதில் முதல் தொகுதியாக ஓகஸட் 2 ஆம் திகதி 15 ஆயிரம் பேருக்கு நியமனக்கடிதங்கள் வழங்கப்படவுள்ளது. ஏனையவர்களுக்கு அடுத்த இரு வாரங்களுக்குத் தொகுதி தொகுதியாக நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளதாகப் பிரதி நிதி அமைச்சர் ரஞ்சித் தெரிவித்தார்.

இதன்படி 30 ஆயிரம் பேருக்கு நியமனக் கடிதங்கள் வழங்கப்படவுள்ளது.

ஓகஸ்ட் மாதம் முதலாம் திகதி முதல் நடைமுறைப்படுத்தப்படும் வகையில், வேலைவாய்ப்புப் பெறுபவர்களின் பெயர்கள் நாளை முதல் பத்திரிகைகளூடாக வெளியிடுவதற்கு அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

இது தொடர்ந்து 5 நாட்களுக்கு பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் எனவும், இதன்படி நாளொன்றுக்கு 3 ஆயிரம் பேரின் பெயர்கள் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படும் கொழும்புத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

முதற்தொகுதியில் வழங்கும் 15 ஆயிரம் நியமனங்களில் 10 ஆயிரம் நியமனங்கள் கல்வி அமைச்சின் நியமனங்கள் என்பது விசேடமானது, அவற்றில் 3 ஆயிரம் பேர் ஆசிரியர்களாக நியமிக்கப்படவுள்ளனர்.

விவசாய அமைச்சுக்கு 1100 பேரும், போக்குவரத்து அமைச்சுக்கு 650 பேரும், புத்தசாசன அமைச்சுக்கு 600 பேரும், பொது நிர்வாக துறைக்கு 514 பேரும், அரச சேவைகள் திணைக்களத்துக்கு 500 பேரும், மகளிர் விவகார அமைச்சுக் 600 பேரெனப் பல பிரிவுகளிலும் தொழில்கள் வழங்கப்படவுள்ளன.

நியமனம் பெறும் இவர்கள் இரண்டு வருடங்களுக்குப் பயிலுநர்களாக நியமிக்கப்பட்டு, மாதாந்தம் 6 ஆயிரம் ரூபா சம்பளம் வழங்கப் படவுள்ளது. (தே)

# பொலநறுவை கிரனைட் வீச்சில் 3 படையினர் உட்பட 5 பேர் காயம்

பொலநறுவைப் பகுதியில் இடம்பெற்ற கிரனைட் தாக்குதலில் மூன்று படையினரும், இரண்டு சிறுவர்களும், படுகாயமடைந்ததாகப் படைத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இரவு 10.15 மணியளவில் இடம்பெற்ற இந்தச் சம்பவம் தொடர்பாக படைத் தலைமையகம் மேலும் தெரிவித்துள்ளதாவது -

சிறுநீரகக்கோளாறு காரணமாக கொழும்பு இராணுவ வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த வேளை, உயிரிழந்த படைச்சிப்பாய் ஆரியசேன (வயது 38) என்பவரின் சடலத்தை படையினர் அவரது சொந்த இடமான பொலநறுவைக்கு கொண்டுசென்றனர்.

இநதவேளை இரு குழுக்களுக்கிடையேயும் ஏற்பட்ட மோதல் காரணமாக இனந்தெரியாத சிலர் கிரனைட் ஒன்றை எதிரணி மீது வீசினர். இவ்வாறு வீசப்பட்ட கிரனைட் - வீதியில் விழுந்து வெடித்ததன் காரணத்தாலேயே படையினரும், பொதுமக்களும் காயமடைந்தனர்.

காயமடைந்த அனைவரும் பொலநறுவை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இந்தச் சம்பவம் தொடர்பாக இதுவரை எவரும் கைதுசெய்யப்படவில்லை. பொலநறுவை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகப் படைத் தலைமையகம் தெரிவித்தது.

## அசிட் வீசப்பட்டதில் பிக்கு மரணம்!

கடவத்தையிலுள்ள விகாரை ஒன்றில் - பௌத்த பிக்குவின் மீது அசிட் வீசப்பட்டதில் பௌத்த பிக்கு உயிரிழந்தார்.

நேற்றுமாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றது எனினும், இந்த அசிட் வீச்சு இடம்பெற்றமைக்கான காரணம் எதுவும் தெரியவரவில்லை.(01)

## கொட்டாவ சம்பவம் குறித்து

# குற்றப்புலனாய்வு துறையினரிடம் விசாரணைகள் ஒப்படைப்பு

(கொழும்பு)

கொழும்பு கொட்டாவ அத்துருகிரியவில் - வீடொன்றில் வைத்து கருணா குழுவைச் சேர்ந்தவர்கள் எட்டுப் பேர் சுட்டுக் கொல்லப்பட்ட சம்பவம் தொடர்பான விசாரணைகளைக் குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் இந்திர டி சில்வா தெரிவித்தார்.

இது தொடர்பாக விசாரணைகளை மேற்கொள்ள ஹோமகம பொலிஸ் அத்தியட்சகர் விக்கிரம பெரேராவின் தலைமையில் இரண்டு குழுக்கள் நியமிக்கப்பட்டுள்ளன.

இந்தச் சம்பவம் குறித்து இவர்கள துரித விசாரணைகளை ஆரம்பித்துள்ளதாகப் பொலிஸ் மா அதிபர் தெரிவித்தார்.

இதேவேளை, நேற்றுமுன்தினம் சுட்டுக் கொல்லப்பட்டவர்களில் ஒருவரான நீல் தம்மிக என்பவர் உயிரிழந்தவர்களுடன் நெருக்கமான தொடர்புகளை வைத்திருந்தவர் என, இராணுவப் பேச்சாளர் கேணல் சுமேத பெரேரா தெரிவித்தார்.

இவர் இராணுவப் புலனாய்வுப் பிரிவைச் சேர்ந்தவர் என வெளியாகும் தகவல்கள் தவறானவை என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.




# பரபரப்பான ஆட்டத்தில் இந்திய அணி வென்றது



(கொழும்பு)

இலங்கை அணிக்கு எதிராக நேற்று நடைபெற்ற பரபரப்பான போட்டியில் வெற்றி பெற்றதன் மூலம் இந்திய அணி ஆசியக் கிண்ண இறுதிப் போட்டியில் பங்குபற்றுவதற்குத் தகுதி பெற்றது.

பகல் இரவு ஆட்டமாக நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற இந்திய அணி முதலில் துடுப்பெடுத்தாடியது.

இந்திய அணியின் ஆரம்பத் துடுப்பாட்ட வீரர் சச்சின் டெண்டுல்கர் 18 ஓட்டங்களுடன் ஆட்டமிழந்துபோக, கங்குலியும், ஷேவாக்கும் இணைந்து இந்திய அணியை வலுவான நிலைக்குக் கொண்டுசென்றனர்.

ஷேவாக் 92 பந்துகளில் 6 பவுண்டரி, 2 சிக்சர்கள் உட்பட, 81 ஓட்டங்களைக் குவித்தார். அணித் தலைவர் கங்கூலி 9 பவுண்டரிகளுடன் 79 ஓட்டங்களைப் பெற்றார்.



அடுத்து வந்த ராவிட் ஒரு ஓட்டத்துடன் மைதானத்தை விட்டுவெளியேற, யுவராஜ்சிங் அபாரமாக ஆடி 46 பந்துகளில் 50 ஓட்டங்களைப் பெற்றார்.

அடுத்துவந்த கைப் ஒரு ஓட்டத்துடன் ரன் அவுட் ஆனார். பார்த்திவ்பட்டேல் 13, இர்பான் பதான் 8 ஓட்டங்களுடன் ஆட்டமிழக்காமல் இருந்தனர். 50 ஓவர்கள் நிறைவில் இந்திய அணி 6 விக்கெட் இழப்பிற்கு 271 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் மாலிங்க 2 விக்கெட்டுக்களையும் சொய்சா, மஃரூப், ஜெயசூரிய ஆகியோர் தலா ஒருவிக்கெட்டையும் வீழ்த்தினர்.

இதனையடுத்து பதிலுக்குத் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி - 7 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் குணவர்த்தனவையும், 5 ஓட்டங்களைப் பெற்றிருந்த நிலையில் ஜெயந்தவையும், இழந்தது.

எனினும் அதிரடி ஆட்டக்காரர் ஜெயசூரிய, நிலைத்துநின்று ஆடி சதமடித்ததுடன் இந்திய அணியையும் பெரும் நெருக்கடிக்குள் தள்ளினார்.



ஆயினும், எதிர் வரிசையில் ஆடவந்த அத்தப்பத்து 8 ஓட்டங்களுடனும், சங்கக்கார 15, ஜெயவர்த்தன 19, டில்சான் 39, சந்தன 11, மஃரூப் 4 ஓட்டங்களுடனும் ஆட்டமிழந்து சென்றனர்.

சொய்சா 3, மாலிங்க 1 ஓட்டத்துடனும் ஆட்டமிழக்காமல் இருந்த போதும் - இலங்கை அணியால் வெற்றிபெற முடியவில்லை.

இலங்கை அணி 9 விக்கெட் இழப்பிற்கு 267 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில் 50 ஓவர்கள் நிறைவு பெற்றதால், 4 ஓட்டங்களால் இந்திய அணி வெற்றிபெற்று - ஆசியக் கிண்ண இறுதிப் போட்டிக்குத் தகுதிபெற்றது.

இந்தப் போட்டியில் ஷேவாக் 3, இர்பான் பதான் 2, சகீர்கான் 2 விக்கெட்டுக்களையும், ஹர்பஜன்சிங், டெண்டுல்கர் ஆகியோர் தலா 1 விக்கெட்டுக்களையும் வீழ்த்தினர்.



லண்டனில் நடந்த சர்வதேச தடகளப் போட்டியில் 'போல்வால்ட்' பந்தயத்தில் ரஷ்ய வீராங்கனை யெலீனா இனின்பேவா உயரம் தாண்டுவதைப் படத்தில் காணலாம்.

இவர் 4.89 மீற்றர் தாண்டி உலக சாதனை படைத்தார். இதற்கு முன்பு அவர் 4.88 மீற்றர் உயரம் தாண்டியதே சாதனையாக இருந்தது.




## அதிக கோல்கள் அடித்த வீரர்

கோபா - அமெரிக்க கிண்ணத்துக்கான உதைபந்தாட்டப் போட்டியின் இறுதி ஆட்டத்தில் பிரேசில் அணி ஆர்ஜென்ரீனாவைத் தோற்கடித்து சாம்பியன் பட்டம் வென்றது.

இந்தப் போட்டியில் பிரேசில் வீரர் அட்ரினோ அதிக கோல்களை அடித்தவர் என்ற பெருமையைப் பெற்றுள்ளார். அவர் 6 ஆட்டங்களில் விளையாடி 7 கோல்களை அடித்துள்ளார்.

அவருக்கு அடுத்தபடியாக ஆர்ஜென்ரீன வீரர் ஜாவிர் சேவிலோ, உருகுவே வீரர் கார்லோஸ், மற்றொரு ஆர்ஜென்ரீன வீரர் கிறிஸ்டியன் ஆகியோர் தலா 3 கோல்கள் அடித்தனர்.

# கோபா - அமெரிக்கக் கிண்ணத்தை பிரேசில் அணி கைப்பற்றியது!

கோபா - அமெரிக்கா கிண்ணத்துக்கான உதைபந்தாட்ட இறுதிப் போட்டியில் - பிரேசில், தண்டனைஉதை மூலம், 4:2 கோல் கணக்கில் ஆர்ஜென்ரீனாவை வீழ்த்தி, சம்பியன் பட்டத்தை வென்றது.

கோபா - அமெரிக்கா கிண்ணக் கால்பந்தாட்டப் போட்டி ,பெரு நாட்டில் நடைபெற்றது. இதன் இறுதிப் போட்டி நேற்று முன்தினம் நடைபெற்றது. இதில் உலகச் சம்பியன் பிரேசில் - ஆர்ஜென்ரீனா அணிகள் மோதின. ஆட்டத்தின் 20 ஆவது நிமிடத்தில் தண்டனை உதையைப் பயன்படுத்தி ஆர்ஜென்ரீனா வீரர் கிறிஸ்டியன் கோல் அடித்தார்.

முதல் பாதி ஆட்டம் முடிய ஒரு நிமிடம் இருக்கையில், பிரேசில் பதில் கோல் அடித்தது. இந்தக் கோலை லூயிஸா அடித்தார்.




88 ஆவது நிமிடத்தில் ஆர்ஜென்ரீனா வீரர் டெல் காடோ, கோல் அடித்தார். இதனால் அந்த அணி 2:1 என்ற கோல் கணக்கில் முன்னணி பெற்றது. கடைசி நிமிடத்தில் பிரேசில் வீரர் அட்ரினோ பதில் கோல் அடித்தார். இதனால், 2:2 என்ற கோல் கணக்கில் சம நிலையில் முடிந்தது.

பின்னர் கூடுதல் நேரம் கொடுக்கப்பட்டது. இதில் இரு அணிகளும் கோல் அடிக்கவில்லை. எனவே, வெற்றி தோல்வியை நிர்ணயிக்க பனால்டி முறை கடைப்பிடிக்கப்பட்டது.

இதில் பிரேசில் அணி 4:2 என்ற கோல் கணக்கில் வெற்றிபெற்று சம்பியன் பட்டத்தைக் கைப்பற்றியது. பிரேசில் அணியில் முன்னணி வீரர்கள் எவரும் ஆடவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.




## போனஸ் புள்ளி முறை பாகிஸ்தான் எதிர்ப்பு

ஆசிய கிரிக்கெட் போட்டியில் பாகிஸ்தானுக்கு எதிரான சூப்பர் லீக் ஆட்டத்தில் இந்தியா 59 ஓட்டங்கள் வித்தியாசத்தில் தோல்விகண்டது. இந்திய அணி 240 ஓட்டங்களைக் கடந்ததால் ஒரு போனஸ் புள்ளியைப் பெற்றது.

இந்த போனஸ் புள்ளியால் இந்தியா இலங்கையை வென்றால் இறுதிப் போட்டிக்குத் தகுதிபெறக் கூடிய நிலையில் இருந்த பாகிஸ்தான் அணி அடுத்து ஆட்டத்தில் பங்களாதேஷ் அணியை அபார வெற்றிகொண்டாலும், இறுதிப் போட்டிக்குள் நுழைய முடியாது என்ற நிலையை இந்தப் போனஸ் புள்ளி ஏற்படுத்தியுள்ளது.

இந்த போனஸ் புள்ளி முறைக்கு பாகிஸ்தான் அணி பயிற்சியாளர் பொல் உல்மர், கேப்டன் இன்சமாம் ஆகியோர் அதிருப்தி தெரிவித்துள்ளனர்.

# முதலாவது டெஸ்ட் போட்டியில் இங்கிலாந்து வெற்றி பெற்றது



லோட்ஸ் மைதானத்தில் நடைபெற்ற மேற்கிந்தியத் தீவுகள் அணிக்கு எதிரான முதலாவது டெஸ்ட் போட்டியில் - இங்கிலாந்து அணி 210 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

இங்கிலாந்து அணி முதல் இனிங்ஸில் 568 ஓட்டங்களுக்கு சகல விக்கெட்டுக்களையும் இழந்தது. இரண்டாவது இனிங்ஸில், இங்கிலாந்து 5 விக்கெட் இழப்புக்கு 325 ஓட்டங்கள் பெற்றிருந்த நிலையில், ஆட்டத்தை இடைநிறுத்துவதாக அறிவித்தது.

மேற்கிந்தியத் தீவுகள் அணி 416 ஓட்டங்களுக்கு முதல் இனிங்ஸில் சகல விக்கெட்டுக்களையும் இழந்ததால், இரண்டாவது இனிங்ஸில் 478 ஓட்டங்களைக் குவித்தால் மட்டுமே வெற்றிபெறமுடியும் என்ற நிலையில் இருந்தது.

இந்த நிலையில் இரண்டாவது இனிங்ஸ் ஆட்டத்தை ஆரம்பித்த மேற்கிந்தியத் தீவுகள் அணி போட்டியின் நான்காவது நாளில் 3 விக்கெட் இழப்பிற்கு 114 ஓட்டங்களைப் பெற்றது.

இறுதி நாளான நேற்றுமுன்தினம் தனது நூறாவது போட்டியில் விளையாடிய பிறைன் லாரா 44 ஓட்டங்களுக்கு ஆட்டமிழந்தார்.

அடுத்து சந்தர்போல் மட்டுமே நிதானமாக நிலைத்துநின்று ஆடிக் கொண்டிருக்க, எதிர் வரிசை வீரர்கள் அனைவரும் சொற்ப ஓட்டங்களுக்குள் இங்கிலாந்து பந்துவீச்சாளர்களால் வீழ்த்தப்பட்டனர்.

இதனால், மேற்கிந்தியத் தீவுகள் அணி 267 ஓட்டங்களை மட்டுமே பெற்றிருந்த நிலையில் சகல விக்கெட்டுக்களையும் இழந்து 210 ஓட்டங்களால் தோல்வி கண்டது.



ஓட்ட நேர முடிவில் சந்தர்போல் ஆட்டமிழக்காமல் 97 ஓட்டங்களைப் பெற்றிருந்தார். இந்தப் போட்டியில் இங்கிலாந்து வீரர் கைல், முதலாவதாக ஐந்து விக்கெட்டுக்களைக் கைப்பற்றினார்.

இவர் 81 ஓட்டங்களுக்கு ஐந்து விக்கெட்டைக் கைப்பற்றியதுடன், இந்த டெஸ்ட் போட்டியில் மொத்தமாக 210 ஓட்டங்களைக் கொடுத்து 9 விக்கெட்டுக்களைக் கைப்பற்றியதால், ஆட்ட நாயகனாகத் தெரிவு செய்யப்பட்டார்.



ஹர்மிசன், ஹோகாட் ஆகியோர் தலா 2 விக்கெட்டுக்களையும், பிளின்ரொப் ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இறுதியாக நடைபெற்ற 8 டெஸ்ட் போட்டிகளில், 7 டெஸ்ட் போட்டிகளில் இங்கிலாந்து அணி வெற்றிபெற்றிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## உதைபந்தாட்டப் போட்டி

(யாழ்ப்பாணம்)

தமிழீழ விளையாட்டுத்துறை, யாழ். மாவட்டப் பிரிவின் அனுமதியுடனும், பருத்தித்துறை உதைபந்தாட்ட லீக் அனுசரணையுடனும் வதிரி தேவரையாளி யங்லயன்ஸ் விளையாட்டுக் கழகம் நடத்தும் மாபெரும் உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டியில் -

நாளை பிற்பகல் 3 மணிக்கு கரணவாய் மத்தி விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து சுடர் ஒளி விளையாட்டுக் கழகம் மோதவுள்ளது. (13)

## 14 பந்துகளில் 58 ஓட்டங்கள் கே.சி.சி.சி. வீரர் சாதனை!

யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தால் நடத்தப்பட்ட 06 வீரர்கள் பங்குபற்றும் 05 ஓவர்கள் கொண்ட கிரிக்கெட் சுற்றுப் போட்டியின் இறுதியாட்டத்தில் யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகத்தை எதிர்த்து விளையாடிய கே.சி.சி.சி. விளையாட்டுக் கழகம் வெற்றிபெற்றது.

முதலில் துடுப்பெடுத்தாடிய யங்ஸ்ரார் விளையாட்டுக் கழகம் 05 ஓவர்களில் 02 விக்கெட்டுக்களை இழந்தது. 65 ஓட்டங்களைப் பெற்றது.

பதிலுக்குத் துடுப்பெடுதாடிய கே.சி.சி.சி விளையாட்டுக் கழகம் 04 ஓவர்களில் 69 ஓட்டங்களைப் பெற்று வெற்றியீட்டியது.

இதில் சபாஆனந் ஆட்டமிழக்காமல் 14 பந்துகளில் 58 ஓட்டங்களைப் பெற்று சாதனை நிலைநாட்டி ஆட்டநாயகனாகவும் தெரிவானார்.

# மீண்டுமொரு போர் வெடித்தால் மக்கள் அனைவரும் அணிதிரள்வோம்

## செல்வம் அடைக்கலநாதன் எம்.பி தெரிவிப்பு

(திருகோணமலை)

போர் எம்மீது திணிக்கப்படும் செய்தி எம்மை நோக்கி வந்துகொண்டிருக்கிறது. இதற்கு உதாரணமாக மட்டக்களப்பு சம்பவங்களுக்குப் பின்புலத்தில் இலங்கை புலனாய்வுத்துறை உள்ளது என்பதை பகிரங்கமாகக் கூறிக்கொள்ள விரும்புகிறேன் என வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் தெரிவித்தார்.

அண்மையில் திருகோணமலையில் நடைபெற்ற குட்டிமணி, தங்கத்துரை படுகொலை நினைவு நாள் நிகழ்வில் கலந்துகொண்டு பேசும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து பேசுகையில்-

'சுதந்திர தமிழீழம் கேட்டபோதும பயங்கரவாதிகள் என்றீர்கள், ஐக்கிய இலங்கைக்குள் உரிமை கேட்டபோதும் பயங்கரவாதிகள் என்றீர்கள். இப்போது இடைக்கால தன்னாட்சி அதிகார தீர்வைக் கேட்டபோதும் பயங்கரவாதிகள் என்றா கூறுகின்றீர்கள்.'

'போர் ஒன்று வெடித்தால் வெறுமனே ஆதரவு தெரிவிப்பவர்களாக நாங்கள் இருக்கமுடியாது. போர் ஓய்ந்த பிறகு போராளிகளுக்கு சாப்பாடு மட்டும் கொடுத்துக்கொண்டு இருக்கமுடியாது. அனைவரும் போராட்டத்தில் இணைந்துகொள்ள வேண்டும்.'

எமது தமிழ் மக்களால், அவர்களின் உணர்வுகளால் உருவாக்கப்பட்ட படை - நாடாளுமன்ற சக்தியாக தமிழ்த்தேசிய கூட்டமைப்பாக உள்ளது.

இத்தகைய ஒருமித்த சக்தியை கண்டு ஜே.வி.பி என்ற பேரினவாத சக்தி மிரண்டுபோயுள்ளது.

நாங்கள் சமாதானத்திற்கும் தயார், சண்டைக்கும் தயார்.

யு.என்.பி உட்பட எந்த சிங்கள பேரினவாத கட்சிகளுக்கும் தமிழர்களின் உரிமைகளை தருவதில் எவ்வித உடன்பாடும் இல்லை.

எதிர்க்கட்சியில் 116 உறுப்பினர்கள் உள்ளனர். ரணில் விக்கிரமசிங்கவுக்கு உண்மையான உணர்வு இருக்குமானால், தற்போதைய அரசை தோல்வியடையச் செய்யமுடியும். ஆனால் அவர் அதனை விரும்பவில்லை. அவரது நோக்கம் எல்லாம் அடுத்த ஜனாதிபதி அல்லது பிரதமர் பதவி குறித்தே இருக்கின்றது. இவர்கள் எல்லோரும் ஒரே குட்டையில் ஊறிய மட்டைகளே.

ஜனாதிபதி சந்திரிகா பெரும் கற்பனையில் இருக்கின்றார். கருணா அனைத்தும் அறிந்தவர். எனவே அவரை வைத்துக்கொண்டு புலிகள் மீது ஒரு போரைத் தொடங்கி அந்தப் போரில் புலிகளை வீழ்ச்சியடையச் செய்யலாம் என்று. இது கற்பனையில் மட்டுமே நடக்கக்கூடிய ஒன்று என்பதை அவருக்கு நான் கூறிவைக்க விரும்புகிறேன் என்று குறிப்பிட்டார்.

நிகழ்வில் யாழ் மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் சிவாஜிலிங்கம், வன்னி நாடாளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன், வினோநோதாரலிங்கம் மற்றும் மறைந்த ரெலோ தாபகத் தலைவர், தங்கத்துரையின் புதல்வர் கரிகாலன், மட்டு நாடாளுமன்ற உறுப்பினர் ஜெயானந்தமூர்த்தி, இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் தலைவர் விநாயகமூர்த்தி ஆகியோரும் உரையாற்றினர். விக்னேஸ்வரன் நிகழ்விற்குத் தலைமை தாங்கினார். (10)



மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் வி.அருளானந்தம் இடமாற்றம் பெற்று செல்வதையிட்டு, நடத்தப்பட்ட பிரிவுபசார விழாவில் மானிப்பாய் தேசிய சேமிப்பு வங்கி முகாமையாளர் ப.சச்சிதானந்தன் உரையாற்றுவதையும் அருகில் அருளானந்தம், திருமதி அருளானந்தம், உதவி முகாமையாளர் ந.பகீரதன் ஆகியோர் அமர்ந்திருப்பதைக் காணலாம். (100)

# ஆழியவளை பாடசாலை புனரமைப்பு பணிகள் இன்னமும் ஆரம்பிக்கப்படவில்லை

## உரியவர்களுக்குக் கடிதம்

வடமராட்சி கிழக்குப் பிரதேசத்தில் போரினால் சேதமடைந்த ஆழியவளை சி.சி.த.க வித்தியாலயத்தின் கட்டட புனரமைப்புப் பணிகள் இன்னமும், ஆரம்பிக்கப்படவில்லை. இவ்விடயம் சம்பந்தமாக இப்பாடசாலையின் அபிவிருத்திச் சங்கத்தினர் கல்வித் திணைக்களம், நிகொட் நிறுவனம் அரசியற்துறை ஆகியவற்றுக்கு கடிதம் அனுப்பியுள்ளனர்.

இப்பாடசாலையைப் புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனம் பல லட்சம் ரூபாவை ஒதுக்கீடு செய்து பல வருடங்கள் சென்றுவிட்டன. ஆனால் ஒப்பந்தகாரரின் தாமதத்தினாலேயே வேலைகள் ஆரம்பிக்கப்படவில்லை.

இந்தப் பாடசாலையில் தரம் ஒன்று தொடக்கம் 13 வரையான வகுப்புக்களில் சுமார் 500 மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். தற்காலிக கொட்டகைளிலும், மர நிழல்களிலுமே வகுப்புக்கள் நடைபெற்று வருகின்றன.

இதேவேளை, இப்பிரதேசத்தில் உள்ள ஏனைய மூன்று பாடசாலைகளை புனரமைப்பதற்கு நிகொட் நிறுவனம் நிதி உதவி செய்து, அவற்றின் புனரமைப்புப் பணிகள் முடிவுறும் தறுவாயிலுள்ளன. (122)

# பல்கலைக்கழக பதிவாளர் நியமனம் பேரவை கூட்டத்தில் தீர்மானம்!

(யாழ்ப்பாணம்)

வெற்றிடமாக உள்ள யாழ்.பல்கலைக்கழக பதிவாளர் பதவிக்கு ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இதுவரைகாலமும் பதிவாளராகக் கடமையாற்றியவர் நிதி மோசடி காரணமாக இடைநிறுத்தப்பட்டதைத் தொடர்ந்து, நீண்டநாட்களாக பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படாத நிலையில் யாழ்.பல்கலைக்கழகம் இயங்கி வருகிறது.

இந்த நிலையில் - எதிர்வரும் 31 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை இடம்பெறவுள்ள யாழ்.பல்கலைக்கழக பேரவைக்கூட்டத்தில் புதிதாகப் பதிவாளர் ஒருவர் நியமிக்கப்படவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

# மீனவர் மாதிரிக் கிராம வீட்டுத் திட்டத்திலுள்ள வீடுகள் புனரமைக்கப்படும்

(யாழ்ப்பாணம்)

1980 - 1985 ஆம் ஆண்டில் மீனவர்களுக்கென கடற்தொழில் அமைச்சினால் அமைத்துக் கொடுக்கப்பட்ட மீனவர் மாதிரிக் கிராம வீட்டுத்திட்டத்தில் உள்ள வீடுகள் புனரமைக்கப்படவுள்ளன.

இந்தத் திட்டத்தின் கீழ் - யாழ். குடாநாட்டில் பல வீடுகள் அமைக்கப்பட்டன. தொண்டர் நிறுவனங்களின் நிதி உதவியுடன் இந்த வீடுகளைப் புனரமைப்பதற்கு யாழ்.செயலகம் நடவடிக்கை எடுத்து வருகின்றது.

வீட்டு உரிமையாளர்களின் பெயர் விபரங்கள் கிராம அலுவலர்கள் மூலமாக அரசாங்க அதிபரினால் திரட்டப்பட்டு வருகின்றன.

கடந்த கால போர் நடவடிக்கைகள் காரணமாக - இந்த வீடுகள் யாவும் முற்றாகச் சேதமடைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (122)

## மல்வம் வீதி மக்கள் பாவனைக்கு

(யாழ்ப்பாணம்)

இராணுவத்தினரின் கட்டுப்பாட்டின் கீழ் முடப்பட்டிருந்த உடுவில் ஞானப்பிரகாசம் வீதி தற்போது மக்கள் பாவனைக்காகத் திறந்துவிடப்பட்டுள்ளது.

கடந்த 1996 ஆம் ஆண்டு தொடக்கம் உடுவில் ஞானப்பிரகாசம் வீதியைப் பொதுமக்கள் பாவனைக்குத் திறந்துவிடுவதற்கு உதவுமாறுகோரி, மல்வம் கிராம பொதுமக்கள் - நாடாளுமன்ற உறுப்பினர் சுரேஷ் பிரேமச்சந்திரனிடம் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இதனையடுத்து அவர் யாழ். மாவட்ட இராணுவத் தளபதியைச் சந்தித்து கலந்துரையாடியதையடுத்து கடந்த வாரம் முதல் இந்த வீதி பொதுமக்கள் பாவனைக்கு திறந்து விடப்பட்டுள்ளது.

## மாதாந்த இசை நிகழ்ச்சி

(யாழ்ப்பாணம்)

இளங்கலைஞர் மன்றம் நடத்தும் மாதாந்த இசை நிகழ்ச்சி இன்று மாலை 5 மணிக்கு நல்லூர் இளங்கலைஞர் மன்ற கலாமண்டபத்தில் நடைபெறவுள்ளது.

# வயோதிபரை மோதிய நபருக்கு யாழ்.நீதிமன்றம் பிடியாணை!

(யாழ்ப்பாணம்)

மோட்டார் சைக்கிள் விபத்தில் காயமடைந்த வயோதிபரை விட்டு தப்பியோடிய நபரை கைதுசெய்யுமாறு, யாழ். மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா உத்தரவிட்டார்.

இந்தச் சம்பவம் பற்றித் தெரிய வருவதாவது,

கடந்த 22 ஆம் திகதி காலை திருநெல்வேலி சந்தையில் மரக்கறி வாங்கிவிட்டு கல்வயல் காட்டுப்பகுதிக்குச் சென்றுகொண்டிருந்த நயினாதீவைச் சேர்ந்த இராமலிங்கம் பரமநாதன் (வயது 65) என்பவரை மோட்டார் சைக்கிளில் வந்தவர்கள் மோதியுள்ளனர்.

இதனால் சைக்கிளில் பயணித்த வயோதிபர் கீழே வீழ்ந்து படுகாயம் அடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார்.

மோட்டார் சைக்கிளில் வந்த நபர் விபத்து நடைபெற்ற இடத்தை விட்டு தப்பிச்சென்றிருந்தார்.

அவர்களது மோட்டார் சைக்கிளை கோப்பாய் பொலிஸார் கைப்பற்றினர். எனினும், விபத்தில் படுகாயமடைந்த வயோதிபர் மறுநாள் உயிரிழந்தார்.

இந்த நிலையில், சந்தேகநபர்களை உடன் கைதுசெய்யுமாறு - நேற்றுமுன்தினம் யாழ்.மாவட்ட நீதிவான் ஆர்.ரி.விக்னராஜா பிடியாணை பிறப்பித்துள்ளார்.

இது குறித்து கோப்பாய் பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரியான ஸ்ரீ செல்வத்திடம் கேட்டபோது -

மோட்டார் சைக்கிளை செலுத்தியவரான வசந்தநாதன் ஜெயக்குமாரைத் தேடி வருவதாகவும், அவருடன் பயணித்த சுப்பிரமணியம் சதீஸ்குமார் தம்மால் அடையாளம் காணப்பட்டிருப்பதாகவும் அவர் தெரிவித்தார். (ப)

# சின்னஞ்சிறு செய்திகள்

## கஸ்தூரியார் வீதி திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கஸ்தூரியார் வீதியின் கில்னர் ஒழுங்கை முதல் நாவலர் வீதி வரையான பகுதி கடந்த சில நாட்களாக செப்பனிடப்பட்டுவருகிறது.

யாழ்.இந்துக் கல்லூரி மைதானப் பிரதேசப் பகுதி மற்றும் பல பகுதிகளில் இவ்வீதி பெரும் சேதமடைந்து இருந்ததுடன், போக்குவரத்துக்கு சீரற்ற பகுதியாகவும் இதுவரைகாலமும் இருந்துவந்தது.

இதேவேளை, இந்த வீதி திருத்தத்தின் மூலம் மழை காலங்களில் இப்பாதையூடாக பயணித்த பயணிகள், பாடசாலை மாணவர்கள் அனுபவித்துவந்த பெரும் அசௌகரியங்கள் நீங்கி, சீரான போக்குவரத்தை மேற்கொள்ள முடியுமென அப்பகுதி மக்களும், பயணிகளும் தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (113)

## மரக்கன்றுகள் அன்பளிப்பு

உள்ளூராட்சி வாரத்தை முன்னிட்டு யாழ்.மாநகர சபையினரால் சனசமூக நிலையங்களுக்கு மரக்கன்றுகள் வழங்கப்பட்டுவருகின்றன.

ஈச்சமோட்டை சனசமூக நிலையத்துக்கு 10 மரக்கன்றுகளும், கிறீன் பீல்ட் சனசமூக நிலையத்துக்கு 5 மரக்கன்றுகளும் வழங்கப்பட்டன.

## திருட்டு மின் பெற்றோர் பொலிஸாரிடம் சிக்கினர்

இலங்கை மின்சாரசபை - பருத்தித்துறை கிளையின் உதவிப் பொறியியலாளர் என்.செல்வசந்திரன் தலைமையிலான குழு ஒன்றும், நெல்லியடி பொலிஸாரும் இணைந்து மேற்கொண்ட திடீர் நடவடிக்கையின் போது திருட்டுத்தனமாக மின்சாரம் பெற்ற 6 குடும்பங்கள் பிடிபட்டன.

இவர்கள் நீதிமன்றங்களில் ஆஜர் செய்யப்பட்டபோது 6 குடும்பத்தினருக்கும் தலா 20 ஆயிரம் ரூபா குற்றப் பணமாக - மொத்தம் ஒரு லட்சத்து 20 ஆயிரம் ரூபா குற்றமாகவும், திருட்டு மின்சாரத்திற்கு பாவிக்கப்பட்ட உபகரணங்களையும் பறிமுதல் செய்யும்படியும் யாழ்.நீதிவான் உத்தரவிட்டார். (17)

## வெறுவெளி அரங்க நிர்வாக குழு தெரிவு

(யாழ்ப்பாணம்)

யாழ். பல்கலைக்கழக வெறுவெளி அரங்க குழுவின் 2004 ஆம் ஆண்டுக்கான புதிய நிர்வாகத் தெரிவு இன்று மாலை 3 மணியளவில் அரங்க பொது மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இதில் அனைத்து வருட நாடகமும் அரங்கியலும் மாணவர்களைத் தவறாது கலந்துகொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## பொற்பதி வீதி மதகு திருத்தம்

(யாழ்ப்பாணம்)

கொக்குவில் - பொற்பதி வீதியில் 20 வருடங்களாக புனரமைப்பு செய்யப்படாத வெள்ளநீர் ஓடும் மதகு ஒன்று புனரமைக்கப்படுகின்றது.

கடந்த 20 வருடங்களாகப் புனரமைக்கப்படாமையால், குறிப்பிட்ட மதகின் வெள்ளநீர் ஓடும் பகுதி தூர்ந்து போயுள்ளது.

இதனால் வெள்ளநீர் வடிந்து செல்லமுடியாத நிலை ஏற்பட்டது. தற்போது இம்மதகு யாழ்.மாநகர சபையினரால் புனரமைக்கப்பட்டு வருகின்றது.

## ஞானச்சுடர் வெளியீடு

(வடமராட்சி)

தொண்டமனாறு சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையினால் மாதம் தோறும் வெளியிடப்பட்டுவரும் ஞானச்சுடர் ஆன்மீக சஞ்சிகையின் ஆடிமாத இதழ் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை காலை 10.30 மணிக்கு வெளியிடப்படும்.

இதன் வெளியீட்டுரையை - இளைப்பாறிய ஆசிரியர் க.தங்கவடிவேல் நிகழ்த்துவார். மதிப்புரையை ஆசிரியர் க.நவரத்தினம் நிகழ்த்துவார். (17)

# யாழ். வலய மட்ட தமிழ்த்தினப் போட்டி!

யாழ். கல்வி வலயத்திற்குட்பட்ட வலயமட்டத் தமிழ்த்தினப் போட்டிகள் எதிர்வரும் 31 ஆம், 1 ஆம் திகதிகளில் வேம்படி மகளிர் பாடசாலை மற்றும் திருக்குடும்பக் கன்னியர்மடம் ஆகிய பாடசாலைகளில் நடைபெறவுள்ளன.

எதிர்வரும் 31 ஆம் திகதி சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் பாடசாலையில் வாசிப்பு, ஆக்கத்திறன் வெளிப்பாடு, பேச்சு, இசைவும் அசைவும், குழு இசை, நடனம், நாடகம், தனி நடனம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

அன்றைய தினம் காலை 8.30 மணிக்கு, திருக்குடும்ப கன்னியர் மடம் பாடசாலையில் வினாடி வினா, பாவோதல், நாட்டுக்கூத்து (வடமோடி/தென்மோடி) இசைநாடகம், சிந்து நடைக்கூத்து, நாடகம் ஆகிய போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இதேவேளை, முதலாம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணிக்கு வேம்படி மகளிர் பாடசாலையிலும் போட்டிகள் இடம்பெறவுள்ளன.

இறுதி நிகழ்வுகளில் தனிநடனம், பேச்சு, குழு நடனம், நாட்டிய நாடகம், தனி இசை, வில்லுப்பாட்டு, விவாதம், பாவோதல் முஸ்லிம் நிகழவுகள் என்பன நடைபெறும்.

அன்றைய தினம் மாலை போட்டிகளுக்கான பரிசளிப்பு நிகழ்வுகளும் இடம்பெறும்.

# ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவன திறப்பு விழாவின்போது...



யுனிசெப் நிறுவன கிளிநொச்சி மாவட்ட வதிவிடப் பிரதிநிதி பெனி புறானி மங்கள விளக்கேற்றுகிறார்.




உப்பு உற்பத்தி நிறுவனப்பணிப்பாளர் செல்வன் பெயர்ப் பலகையை திரைநீக்கம் செய்துவைப்பதைக் காணலாம்.



கிளிநொச்சி அரச செயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் மத்தியூஸ் களஞ்சிய அறையினை திறந்துவைத்தார்.



தமிழீழத் தேசியத்தலைவருக்கு உப்பு உற்பத்தி பணியாளர்கள் சார்பில் ஜெயராஜசிங்கம் அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கனிடம் பாரிசினை வழங்குவதைக் காணலாம்.



நிகழ்வில் பங்குபற்றிய பிரமுகர்களைக் காணலாம்.

# ஆனையிறவு உப்பு உற்பத்தி நிறுவனம் நேற்று கோலாகலமாக திறந்துவைப்பு

(கிளிநொச்சி)

யுனிசெப் நிறுவனத்தின் நிதியுதவியுடன், ரெக் நிறுவனத்தினால் வடிவமைக்கப்பட்ட அயடீன் உப்பு உற்பத்தி நிலையம் நேற்று ஆனையிறவில் கோலாகலமாகத் திறந்து வைக்கப்பட்டது.

நேற்றுக்காலை 11 மணிக்கு ரெக் நிறுவனத்தின் பணிப்பாளர் சுந்தரமூர்த்தி தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் -

யுனிசெப் நிறுவன கிளிநொச்சி மாவட்ட வதிவிடப் பிரதிநிதி பெனி புறானி, ரெக் நிறுவனத்தின் பணிப்பாளர் சுகுணன் ஆகியோர் மங்கள விளக்கினையும், உப்பு உற்பத்தி நிறுவனப் பணியாளர் இந்திரா பொதுச்சுடரினையும் ஏற்றிவைத்தனர்.

அதனைத்தொடர்ந்து - பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன் தமிழீழத் தேசியக் கொடியினை ஏற்றிவைக்க, கிளிநொச்சி அரச செயலக பிரதித்திட்டப் பணிப்பாளர் மத்தியூஸ் களஞ்சிய அறையினைத் திறந்துவைத்தார்.

உப்பு உற்பத்தி நிறுவனப் பணிப்பாளர் செல்வன் பெயர்ப்பலகையை திரைநீக்கம் செய்து வைத்தார். அதனைத்தொடர்ந்து, அகில இலங்கை யுனிசெப் நிறுவனத் திட்டமிடல் இணைப்பாளர் தொழிற்கூடத்தினைத் திறந்துவைத்தார். அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ.தங்கன் ஆய்வுகூடத்தினைத் திறந்து வைத்தார்.

இந்தநிகழ்வில், தமிழீழத் தேசியத்தலைவருக்கு உப்பு உற்பத்தி நிறுவனப் பணியாளர்கள் சார்பில் ஜெயராஜசிங்கம், அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் சோ. தங்கனிடம் பரிசினை வழங்கினார்.

இதனைத்தொடர்ந்து - அரசியற்துறை துணைப் பொறுப்பாளர் தங்கன், தமிழீழ பொருண்மிய மேம்பாட்டு நிறுவனப் பொறுப்பாளர் கரிகாலன், யாழ்-கிளிநொச்சி மாவட்ட விவசாய உற்பத்தி, நுகர்வோர் கூட்டுறவு சமாசத்தின் தலைவர் கனகலிங்கம் ஆகியோர் உரை நிகழ்த்தினர்.

# பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்ய ஏற்பாடு

(வடமராட்சி)

வடமராட்சி தெற்கு மேற்கு, நல்லூர். சுன்னாகம் ஆகிய பிரதேசங்களில் யுத்த நடவடிக்கையால் பின்தங்கிய கிராமங்களை அபிவிருத்தி செய்வதற்கான நடவடிக்கைகள் யாழ். செயலகத்தால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

மேற்படி பிரதேசங்களில் உள்ள கிராமங்களைத் தெரிவு செய்து இவ்வாறான அபிவிருத்தித்திட்டம் நடைமுறைப்படுத்தப்படும் என யாழ்.செயலக அதிகாரியொருவர் தெரிவித்தார்.

போரினால் பாதிக்கப்பட்ட கிராமங்களில் வாழும் மக்களின் தொழில் விபரங்கள் பற்றிய தகவல்கள் சேகரிக்கப்பட்டு வருவதாகத் தெரிவிக்கப்படுகிறது. (17)

## 'மலைமேல் கொலை' தென்மோடி கூத்து

(யாழ்ப்பாணம்)

யாகப்பர் கலைமன்றம் தயாரித்து மேடையேற்றும் மலைமேற் கொலை தேவசகாயம்பிள்ளை தென்கோடி நாட்டுக்கூத்து புனித யாகப்பர். ஆலய திருநாளை முன்னிட்டு இன்று இரவு 9.30 மணிக்கு மேடையேற இருக்கிறது.

பங்குத்தந்தை அருட்பணி சகாயநாயகம் அடிகளார் தலைமையில் நடைபெறவுள்ள இந்தநிகழ்வில் -

பெரும்பொருட்செலவில் குருநகர் கலைஅரங்கமேடையில் ஆற்றுப்படுத்தவுள்ள நாட்டுக்கூத்தில், முக்கிய பங்கு வகிக்கும் அண்ணாவியார் த. யேசு நெய்தலம், இயக்குனர் அருட்திரு அ.பி.ஜெயசேகரம் அடிகளாகளாரால் பொன்னாடை போர்த்திக் கௌரவிக்கப்படுவார்.

வண.பிதா பி.எம்.இம்மானுவேல் அடிகள் - நாட்டுக்கூத்துக்கான தாளத்தை வழங்கி கூத்துநிகழ்வைத் தொடக்கி வைப்பார். (206)

## பரீட்சை முடிவுகள் வெளியாகின

(யாழ்ப்பாணம்)

பதவி நிலை உத்தியோகத்தர்களுக்கான 2 ஆம் கட்டப் பரீட்சைப் பெறுபேறுகள் வெளியாகியுள்ளன.

கடந்த மே மாதம் நடைபெற்ற இந்தப்பரீட்சைக்கு யாழ்மாவட்டத்தைச சேர்ந்த ஐம்பதுக்கும் அதிகமானோர் தோற்றியிருந்தனர்.

இதில்,25 பேர்வரையில் சித்தி டைந்திருப்பதாகவும், பெறுபேறுகளை இணையத்தளம்மூலம் பார்வையிட முடியுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (ப)

## முன்பள்ளி விளையாட்டு விழா

வலிகாமம் வடக்கு பிரதேசசபை முன்பள்ளி விளையாட்டு விழா இன்று பிற்பகல் 2 மணிக்கு மல்லாகம் விசாலாட்சி வித்தியாசாலை மைதானத்தில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் - பிரதேசசபையின் செயலாளர் செ.செல்வரத்தினம் பிரதம விருந்தினராகக் கலந்து கொள்வார்.

தெல்லிப்பளைக் கோட்ட பிரதிக் கல்விப் பணிப்பாளர் பா.சந்திரபாலன் சிறப்பு விருந்தினராகக் கலந்துகொள்வார்.

## மாணவர்கள் கௌரவிப்பு

கோப்பாய் சரவணபவானந்தா வித்தியாலய 5 ஆம் ஆண்டு புலமைப பரிசில் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்களைக் கௌரவிக்கும் நிகழ்வு வித்தியாலய பழைய மாணவர் சங்கத்தின் ஆதரவுடன் இன்று காலை 9 மணிக்கு வித்தியாலய அதிபர் நா.சண்முகரத்தினம் தலைமையில் நடைபெறவுள்ளது.

பிரதம விருந்தினராக இளைப்பாறிய உபஅதிபர் க.மார்க்கண்டு கலந்து கொண்டு மாணவர்களுக்கு பரிசில்கள் வழங்கிக் கௌரவிப்பார்.

## கட்டாக்காலி நாய்கள் அழிப்பு

நல்லூர் பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கீழ்வரும் இடங்களில் கட்டாக்காலி நாய்கள் அழிக்கப்படவுள்ளன.

நாளை காலை முதல் கோண்டாவில் நாகபூசனி அம்மன் கோவில் வீதி, ஆஸ்பத்திரி வீதி, ஆகிய இடங்களில் உள்ள கட்டாக்காலி நாய்கள் பிடிக்கப்பட்டு அழிக்கப்படவுள்ளன.

அன்றையதினம் வளர்ப்பு நாய்களை கட்டிவைக்குமாறு பிரதேச சபையின் செயலாளர் தெரிவித்தார்.

## ஏகாதசி விரதம்

அளவெட்டி தெற்கு சிறிநாகவரதா நாராயணர் ஆலயத்தில் இன்று காலை 10 மணிக்கு ஏகாதசி விரதபூசை பக்தி பூர்வமாக நடைபெறவிருக்கிறது.


# சிறுவிளம்பரம்

## இலவசம்

புள்ளிவிபரத் திணைக்களத்திற்கு Computer Programmer/System Analyst பதவிக்கு ஆட்களைத் தேர்வு செய்யும் போட்டிப் பரீட்சைக்கான விண்ணப்பப்படிவங்களை MCS, 324, பலாலி வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியில் இலவசமாகப் பெற்றுக் கொள்ளலாம். (சி/2787)

## விற்பனைக்குண்டு

சன்னாகம், அச்சுவேலி விளங்கிசந்தையில் 2 பரப்புக் காணியுடன வீடு விற்பனைக்குண்டு. (தரகர் தேவையில்லை), தொடர்பு கொள்ளவேண்டிய முகவரி : பிறேமா-ஜெகதீசர், 173, அரசடி றோட், நலலூர், யாழ்ப்பாணம். T.P.No : 0712-327972 (794)

நிறஞ்சனாஸ் சங்கானை

எம்.ஜி.ஆர் இரு வேடங்களில், லதா, மஞ்சுளா மற்றும் நம்பியார் நடித்த

நினைத்ததை முடிப்பவன்

காட்சி நேரம் : 11.00. 2.45. 6.00 (பு.நே.)

வெள்ளி, சனி, ஞாயிறு இரவு 8.45 (பு.நே) Random Hearts

(சி-2723)



நாகம்ஸ் சன்னாகம்

சிம்பு, ரம்யா,கருணாஸ் மனோரமா நடித்த



குத்து

தினசரி காட்சிகள் : 11.00, 3.00, 7.00 (பு.நே)

ராஜா யாழ்ப்பாணம்.

இன்று முதல் அர்ஜுன்,மீனா,நெப்போலியன், மணிவண்ணன் நடித்த

அன்புசகோதரன்



காட்சிநேரம்:-10.30, 2.30,6.30,9.30 (..நே)

(சி-2725)

# PILLIAR INN GARDEN RESTAURANT

## இன்றைய ஸ்பெசல்

| | |
|---|---|
| ❋ பால் அப்பம் | ❋ முட்டை அப்பம் |
| ❋ காலை உணவு | ❋ தண்டூரி சிக்கின் |
| ❋ மதிய உணவு | ❋ ஆட்டாமா பிட்டு |
| ❋ இரவு உணவு | ❋ குரக்கன் பிட்டு |
| ❋ சிக்கின் புரியாணி | ❋ கடல் உணவு |
| ❋ சப்பாத்தி | ❋ , பரோட்டா |

(சி/2789)

இறைந்தது 3, 4 மணித்தியாலங்களுக்கு முன் உங்கள் ஓடர்களை பதிவு செய்யவும்

- விட்டு வைபவங்களுக்கு உங்கள் இடத்துக்கு வந்து உணவு வகையறாக்கள் தயாரித்துக் கொடுக்கப்படும்.
- உணவுகள் சிற்றுண்டிகள் பார்சலாக தரப்படும்.
- முன்கூட்டிய ஓடர்களுக்கு வீட்டுவாசலில் கொண்டுவந்து விநியோகிக்கப்படும்.
- குளியலறையுடன் கூடிய குளிரூட்டப்பட்ட அறைகள்.
- உங்கள் பயண நலன்கருதி குளிரூட்டப்பட்ட வாகனம்.
- இருந்த இடத்திலிருந்தே லைன்ஏயர் (Lion Air) எக்ஸ்போ ஏவியேசன் (Expo Aviation) விமான பயணச் சீட்டுக்கள்.

போன்ற அனைத்து சேவைகளையும் ஒரே இடத்தில் பெற்றுக்கொள்ள தொடர்புகொள்ளவேண்டிய இடம்.

பிள்ளையார் இன் (Stores)
31, மானிப்பாய் வீதி,
யாழ்ப்பாணம்.

T.P: 021 222 5595, 021 222 2829
Fax: 021 222 5595
E-mail: piyarinn@sltnet.lk
Website: www.pillaiyarinn.com

COMMERCE STUDENTS' UNION · UNIVERSITY OF JAFFNA

# வரலாறு காணாத மலிவு விற்பனை

கொழும்பு ஜெயா புக் சென்ரரின் அனுசரணையுடன் யாழ்.பல்கலைக்கழக வணிக மாணவர் மன்றத்தினால் பல்கலைக்கழகத்தில் இரண்டாவது தடவையாக வரலாறு காணாத மலிவு விற்பனை நடைபெறவுள்ளது.

காலம் : 2004 ஜூலை 19 முதல் 29 வரை
நேரம் : தினமும் காலை 9.00 மணிமுதல் 6.00 மணிவரை (புதிய நேரம்)
இடம் : யாழ்.பல்கலைக்கழக வணிகத்துறை விரிவுரை மண்டபம்.

- சகலருக்கும் இலங்கை நூல்களுக்கு 10% கழிவு வழங்கப்படும்.
- பிறநாட்டு வெளியீடுகளுக்கு 15% கழிவு வழங்கப்படும்.
- மொத்தமாகக் கொள்வனவு செய்யும் அனைவருக்கும் இலங்கை வெளியீடுகள் தவிர பிறநாட்டு வெளியீடுகளை (ஒவ்வொன்றிலும் ஆகக்குறைந்தது 10 பிரதிகள்) கொள்வனவு செய்வோருக்கு விசேட கழிவாக 20% வழங்கப்படும்.

பாடசாலைகள், பல்கலைக்கழகம், தொழில்நுட்ப கல்லூரிகள், கல்வியியல் கல்லூரி, பொதுநிறுவனங்கள், பிரதேசசபை நூலகங்கள், தனியார் கல்வி நிறுவனங்கள் ஆகிய நிறுவனங்களுக்கு கடன் அடிப்படையில் புத்தகங்கள் கொள்வனவு செய்வதற்குரிய ஒழுங்குகள் செய்யப்படும்.

தொடர்புகளுக்கு: வணிக மாணவர் மன்றம், யாழ்.பல்கலைக்கழகம்.

(சி-2764)

# வரலாறும் சமூகக்கல்வியும்

1. புராதன காலப்பகுதியில் சுதேசிய மக்கள் வாழ்ந்தமைக்கான புதைபொருள் அகழ்வு மேற்கொள்ளப்பட்ட இடங்களுள் உள்ளடங்காதது.
(1)மஹியங்கனை (2)நிக்கரவரெட்டிய (3)பதியகம்பளை (4)பொம்பரிப்பு

2. ஆரியர் வருகையினைக் குறிக்கும் காலமாக கருதப்படுவது?
(1) கி.பி.6 ஆம் நூற்றாண்டு (2) கி.மு. 6 ஆம் நூற்றாண்டு
(3) கி.பி. 1 ஆம் நூற்றாண்டு (4)கி.பி. 1 - 5 ஆம் நூற்றாண்டு

3. நீர்ப்பாசனக்குளம் ஒன்றில் இருந்து மேலதிகமான நீரை வெளியேற்று வதற்கு உதவுகின்ற பகுதி
(1) சுருங்கை (2) கலிங்கல் (3)கலிங்கற்தொட்டி (4) அலைதாங்கி

4. பிரித்தானியர் வரிகளை அறவிடுவதற்காக நியமித்த அதிகாரிகள்
(1)அவுமில்தார் (2)பிரதானிகள் (3)ஆளுநர் (4)இரட்டமயாத்மாக்கள்

5. 'சாரானார்த்த சங்கிரஹய' என்பது
(1) புராதன கால இலக்கியம்
(2) புராதன காலத்தில் வெளியிடப்பட்ட மருத்துவ சஞ்சிகை
(3) வெளிநாட்டவர் குறிப்பு (4) கல்வெட்டில் காணப்படும் வாசகம்

**6 - 10 வரையான வினாக்களுக்கு இலங்கைப் படத்தினை அடிப்படை யாகக் கொள்க**



6. X - Y கோடு குறிக்கம் அகலக்கோடு
(1) $6^0$ வட அகலாங்கு (2) $7^0$ வட அகலாங்கு
(3) $8^0$ வட அகலாங்கு (4) $9^0$ வட அகலாங்கு

7. N என்ற எழுத்தினால் காட்டப்பட்டுள்ள இராச்சியம்
(1) சீதாவாக்கை (2) கோட்டை
(3) இறைகம (4) மலையகம்

8. கதம்ப நதியினைக் குறிக்கும் எழுத்து
(1)A (2)B (3) C (4)D

9. தாதுசேனன் கட்டிய வாவியினை
(1)A (2)B (3)M (4)N

10. அரசி பத்தகச்சனா வந்திறங்கிய துறைமுகத்தினைக் குறிக்கும் எழுத்து
(1)E (2)F (3)G (4)H

11. தொன்கதரீனாவை திருமணம் செய்தமையாலும் தந்ததாதுவினைக் கைப்பற்றியதனாலும் அரசுரிமையை உறுதிப்படுத்துவதில் வெற்றி கண்ட மனிதன்
(1) இரண்டாம் இராஜசிங்கன் (2) 1 ஆம் விமலதர்மசூரியன்
(3) கீர்த்தி ஸ்ரீ இராஜசிங்கன் (3) 1 ஆம் இராஜசிங்கன்

12. மகாசேன மன்னனின் ஆட்சி தொடர்பாக பின்வரும் கூற்றுக்களில் பிழையானது எது?
(1) பாரிய நீர்ப்பாசன முறையினை நிர்மாணித்தமை
(2) மகாஜன புத்த மதத்திற்கு அனுசரணை வழங்கியமை
(3) பௌத்த சங்கத்தைப் புனருத்தானம் செய்து திரிபிடகத்தை எழுதுவித்தமை
(4) அபயகிரிக்கும் மகாவிகாரைக்கும் இடையில் காணப்பட்ட முரண பாடுகளை அதிகரித்தமை

13. நீண்டகாலமாக இலங்கையின் கலாசாரம், பண்பாடு என்பவற்றின் மீது செல்வாக்கு ஏற்படுத்துவதற்குக் காரணமாக இருந்த சம்பவம் எது?
(1) பிரித்தானியர் இலங்கையைக் கைப்பற்றியமை
(2) சோழர் இலங்கையை கைப்பற்றியமை
(3) கரையோரப்பகுதியை போர்த்துக்கீசர் கைப்பற்றியமை
(4) மஹிந்த தேரரால் பௌத்தமதம் கொண்டுவரப்பட்டமை

14. பாரம்பரிய தொழில்நுட்பங்கள் அவசியம் தேவைப்படும் கைத்தொழில்க ளாகக் கருதப்படக்கூடியவை
(1) மரச்செதுக்கல் (2) மாணிக்கக்கல் பட்டை தீட்டுதல்
(3) களிமண் மட்பாண்டப் பொருட்கள் உற்பத்தி
(4) ரேந்தை பின்னுதலும் தளபாடம் செய்தலும்

15. பின்வருவனவற்றுள் எது பொருத்தமான தொழில்நுட்பம் என்ற கருத்தை உள்ளடக்குகின்றது.
(1)இயந்திரங்களைப் பயன்படுத்தி பெருமளவில் உற்பத்தி செய்தல்
(2) இயந்திரங்களைப் பயன்படுத்தி செறிவான பயிர்ச்செய்கையில் ஈடுபடுதல்
(3) நாட்டின் பொருளாதார மனித பௌதீக வளங்களுக்கு இயைபான கருவிகளையும், நுட்பங்களையும் பயன்படுத்துதல்

16. 1 ஆம் இராஜசிங்கன் போத்துக்கேயரை முல்லேரியாப் போரில் வெற்றி கொண்ட ஆண்டு?
(1)1562 (2)1582 (3)1504 (4)1638

17. பிரித்தானியருக்கு கண்டி இராச்சியத்தைக் கைப்பற்ற முடிந்தமைக்கு ஏதுவான காரணம்
(1) சிங்களவர் மத்தியில் காணப்பட்ட ஒற்றுமையின்மை
(2) கெரில்லா யுத்தமுறை தொடாபாக பிரித்தானியருக்கு இருந்த அறிவு
(3) நெடுஞ்சாலைகளும், புகையிரதப்பாதைகளும் அமைக்கப்பட்டமை
(4) சண்டையிடுதலில் பிரித்தானிய முறையில் முன்னேற்றம்

18. அனுராதபுர காலத்தின் பின்னரைப் பகுதிவரை இந்திய - இலங்கை உறவில் அதிக அளவில் காணக்கூடியதாக இருந்தது.
(1) ஆக்கிரமிப்பு (2)வர்த்தக தூதுப்பயணம்
(3) குடிப்பெயர்வு (4)கலாசார தூதுப்பயணம்

19. உலர்வலயத்தில் குடியேறிய ஆரம்ப ஆரிய குடியேற்றவாசிகள் எதிர் நோக்கவேண்டியிருந்த மிகப்பெரிய சவால்
(1) தங்களின் சொந்த இடத்துடன் தொடர்பினை ஏற்படுத்த இடர்பட்டமை
(2) புதிதாகக் குடியேறிய இடங்களில் இருந்த காடுகளை அழிப்பதற்கு இடர்பட்டமை
(3) குடியிருப்புக்கள் பரவிய இடங்களில் நிலவிய நிச்சயமற்ற மழைவீழ்ச்சி
(4) சுதேசிய மக்கள் இனத்தவர்களால் எப்போதும் காட்டப்பட்ட எதிர்ப்பு

20. லசத்திய கா என்பதனால் இனம் காணப்படுவது
(1) தூபியின் அலங்காரத்துக்காகக் கட்டப்படும் ஆக்கம்
(2) தூபியின் பாதுகாப்பிற்காகக் கட்டப்படும் ஆக்கம்
(3) தூபியின் புனித சின்னங்கள் வைக்கப்படும் பகுதி
(4) தூபியின் கோளவடிவமான அண்டம் வைக்கப்பட்டுள்ள பகுதி

21. புராதன காலம் தொட்டு விருத்தியடைந்த இந்த நாட்டின் கலா சாரத்தின் சிறப்பானது
(1) தென்னிந்தியாவின் கலாசாரப் பண்புகளைப் பெருமளவில் ஒத்திருந்தமை
(2) வட இந்தியாவின் கலாசாரப் பண்புகளை பெருமளவில் ஒத்திருந்தமை
(3) இந்தியாவின் கலாசாரம் செல்வாக்குக்குட்பட்ட போதிலும் தனித் தன்மையும் விருத்தி பெற்றிருந்தமை
(4) கிரேக்க உரோம கலாசாரச் செல்வாக்குக்குட்பட்டிருந்தமை

22. அபிவிருத்தியை அளவிடுவதற்குப் பயன்படுத்தப்படும் மனித அபிவிருத்திச் சுட்டியைத் தயாரிப்பதற்கு அடிப்படையான பிரமாணங்கள் காணப்படும் விடை எது?
(1) ஆள்வீத வருமானம், ஆயுள் எதிர்பார்ப்பு, சனத்தொகை விருத்தி வேகம்
(2) ஆள்வீத வருமானம், சிசுமரணவீதம், எழுத்தறிவு
(3) ஆயுள் எதிர்பார்ப்பு, எழுத்தறிவு, கொள்வனவு சக்தி
(4) சனத்தொகை விருத்தி வீதம், சிசு மரண வீதம், எழுத்தறிவு

23. பின்வருவனவற்றுள் ஓர் ஆற்றுப்பள்ளத்தாக்கின் நீரை வேறோர் ஆற்றுப பள்ளத்தாக்கிற்குக் கொண்டுசெல்லும் தொழில்நுட்பவியல் நிபுணத்துவத் தைத் தெளிவாகக் காட்டுவது எது?
(1) அங்கமடில்ல கால்வாய் (2) ரிதிபந்திர கால்வாய்
(3) எலகர கால்வாய் (4) ஜோத கால்வாய்

24. பின்வருவனவற்றுள் திஸவாவியின் நீரை சுரங்கவழிக் கால்வாயைப் பயன்படுத்தி நிர்மாணிக்கப்பட்ட மிகச் சிறந்த நுட்பம் எது?
(1)ரண்மசு பூங்கா (2)அத்பொகுண
(3)மகாமேவனம் (4)குட்டம் பொகுண

25. 1848 ஆம் ஆண்டு மாத்தளை, குருநாகல் கலவரத்துக்கு தலைமை தாங்கியவர்களுள் உள்ளடங்காதவர்
(1)குடாபொல (2)ஹெப்பற்றிப்பொல
(3) கொங்கொல கொல பண்டாரா (4)வீர புணரப்பு

26. இராஜ தாஸ்கினி என்ற இந்தியாவின் வம்சக் கதையிலிருந்து அறியப் படுவது?
(1) இலங்கைத்தீவின் சிறப்புப் பற்றி
(2) இலங்கை மன்னர்கள் பற்றி
(3) இலங்கைத் தொழில் நுட்பவியலாளர்கள் பற்றி
(4) இலங்கை மக்களின் வாழ்க்கை பற்றி

27. ஆற்றை மறித்து அணை வெட்டுவதற்கு தரைத்தோற்ற இயல்பினைப் பயன்படுத்தினர். இதன் முக்கிய இயல்பு
(1)சாய்வு (2)சுவடு (3)பள்ளத்தாக்கு (4)கணவாய்

28. ஆரியரின் ஆரம்பக் குடியேற்ற நதிக்குப் பொருத்தமான சொல்
(1) மல்வத்து ஓயா (2)அருவியாறு (3)அம்பன் கங்கை (4)கதம்பநதி

29. மினிப்பேக் கால்வாய் அமைக்கப்பட தொடர்புடைய நதி
(1)கலா ஓயா (2)கதம்பநதி
(3)தெதுறுஓயா (4)மகாவலி கங்கை

30. புத்தபெருமானின் புனித கேசம் வைத்துக் கட்டப்பட்ட தூபி
(1) எம்பக்க தூபி (2)தூபராம
(3)திரியாய தூபி (4)ஜேதவனரா

I.S.ஜெகன் B.A. (Hons) Geo Spl

இங்கே மடிக்கவும்





மாணவர் மலர்

## மாணவர்களைப் பாடசாலைகளுக்குத் தேர்ந்தெடுப்பதற்கும், மாணவர்களுக்கு உதவிப்பணம் வழங்குவதற்குமாகத் தரம் 5 மாணவர்களுக்கு நடாத்தப்படும் மாதிரிப்பரீட்சை - 2004

◆ கீழேயுள்ள அட்டவணையில் முதல் நிரலில் உள்ள பொருள் எந்த ஆக்கத் தொழிற்பாட்டுக்குரியது என்பதைத் தெரிந்து பொருத்தமான நிரலுக்கு நேரே " √ " என அடையாளமிடுக.

| இல | பொருள் | சித்திரம் | நடனம் | சங்கீதம் | தையல் |
|---|---|---|---|---|---|
| 1. | அகலக்கோடுகள் | | | | |
| 2. | மேளம் | | | | |
| 3. | கிற்றார் | | | | |
| 4. | வண்ணத் துணித் துண்டுகள் | | | | |
| 5. | உடுக்கு | | | | |
| 6. | முறிகோடுகள் | | | | |
| 7. | களி நூல் கோர்வை | | | | |
| 8. | வீணை | | | | |
| 9. | சதங்கை | | | | |
| 10. | காய்ந்த மலர் இதழ்கள் | | | | |

இலக்கம் 11 முதல் 14 வரை பின்வரும் படங்களுக்குரிய ஆங்கிலப் பெயரை எழுதுங்கள்

11.  ......................................

12.  ......................................

13.  ......................................

14.  ......................................

◆ இலக்கம் 15 முதல் 24 வரை உரைப்பகுதியை வாசித்துப் பின்வரும் வினாக்களுக்கு விடை தருக.

அன்றைய அமாவாசை இரவு மிகவும் பீதி கலந்ததாகும். நாட்டில் ஆசுவாச மாக மனிதர் நடமாடமுடியாத ஒரு காலம். பல்வேறு இல்லங்களில் கொள்ளையர் சூறையாடினர். பல உத்தமர்களைக் கொலை புரிந்தனர். அன்றைய பயங்கர அமாவாசை இரவை எண்ணும்போது இன்னும் மயிர்கூச் செறிகிறது.

15. அன்றைய அமாவாசை எப்படியானது?..............................
16. ஆசுவாசமாக யார் நடமாடமுடியாத காலம்?..............................

◆ ஒத்த கருத்து தருக.
17. பீதி.............................. 18. இல்லம்..............................
19. இரவு..............................

◆ எதிர்க்கருத்து தருக
20. இரவு.............................. 21. உத்தமர்..............................
22. அன்று..............................

23. இப்பந்தியில் உள்ள வினைச்சொற்கள் இரண்டு எழுதுக
..............................

24. கலந்ததாகும் என்பதைப் பிரித்து எழுதுக
..............................

◆ இல. 25 முதல் 26 வரை பின்வரும் பாடலை வாசித்த விடை தருக:

கன்னங் கறுத்த குட்டியாம்
வெள்ளைப் பாலை நக்குமாம்
எனது காலை நக்கியே
எட்டி ஓடிப் போகுமாம்.

25. இப்பாடலில் வரும் பெயர் அடைமொழி ஒன்று ..............................
26. இப்பாடலில் வரும் வினை அடைமொழி ஒன்று ..............................
27. "போகுமா" என்பதன் நிகழ்கால வடிவம் யாது?..............................

◆ இல. 28 முதல் 29 வரை பின்வரும் வினாக்களுக்கு விடை தருக. பின் வரும் கோலங்களில் இடைவெளிகளில் வரவேண்டிய எண்களை எழுதுக




கோலம் I...... கோலம் II.......... கோலம் III ..........

28. விமலன் மாதாந்த தவணைக் கட்டணம் கட்டும் முறையில் ஒரு தொலைக்காட்சிப் பெட்டியை வாங்கினார். அவர் இரண்டு மாதங்கள் கட்டிய பணம் 1500 ரூபாவாகும். அவருக்குரிய தவணை 8 மாதங்கள் எனின் அவர் கட்ட வேண்டிய மொத்தப் பணம் எவ்வளவு?

29. கமலா தன் வீட்டின் வடக்கேயுள்ள நண்பி வீட்டுக்குச் சென்று அங்கிருந்து கிழக்கேயுள்ள பாடசாலைக்குச் செல்வாள். பாடசாலை கமலாவின் வீட்டுக்கு எத்திசையில் உள்ளது?..............................

◆ இல. 30 தொடக்கம் 33 வரை உருவில் பெயர் குறிக்கப்பட்ட கோணங்க ளின் பெயர்களை எழுதுங்கள்




30. ..............................
31. ..............................
32. ..............................

◆ இல. 33 தொடக்கம் 38 வரை உருவில் உள்ள பகுதிகளுக்குப் பெயரிடுக.




33. ..............................
34. ..............................
35. ..............................
36. ..............................
37. ..............................
38. ..............................

◆ இல. 29 முதல் 41 வரை பின்வரும் வினாக்களுக்கு விடை தருக
39. ஆடிகளின் இரண்டு வகைகளின் பெயர் குறிக்க
1.............................. 2..............................
40. தெம்பு கோல்கள் இரண்டு தருக 1.............. 2..............
41. காந்தத்தின் இரு முனைகள் எவை 1.............. 2..............

◆ இல. 42 முதல் 44 வரை பின்வரும் வீதிச் சமிஞ்சைகள் தரும் பொருள் யாது?

   .....

♦ இல. 45 முதல் 47 வரை தேசியக் கொடியில் உள்ள பின்வரும் அம்சங்கள் எதனைக் குறிக்கின்றது.

45. வாளேந்திய சிங்கம் ....................................
46. செம்மஞ்சள் நிறம் ....................................
47. பச்சை நிறம் ....................................

♦ மயூரனின் தந்தையார் சந்தையில் வாங்கிய பொருட்களைப் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. அதனை வாசித்த பின் அதன் கீழுள்ள வினாக்களுக்கு விடை தருக. 48 முதல் 57 வரை விடை தருக.

| பொருள் | அளவு | விலை (ரூபா சதம்) |
|---|---|---|
| அரிசி | 2 kg | 60.50 |
| கருவாடு | 500g | 40.00 |
| கீரை | 2 பிடி | 30.00 |
| வாழைப்பழம் | 10 பழம் | 80.20 |
| எள்ளுருண்டை | 5 | 10.00 |
| மொத்தம் | | |

48. 1kg அரிசியின் விலை என்ன? ....................................
49. 1kg கருவாட்டின் விலை என்ன? ....................................
50. ரூபா 15.00 க்கு எத்தனை பிடி கீரை வாங்கலாம்? ....................................
51. ஒரு வாழைப்பழத்தின் விலை யாது? ....................................
52. எள்ளுருண்டை ஒன்றின் விலை யாது? ....................................
53. சந்தையில் உள்ள பொருட்களை வாங்க எவ்வளவு பணம் தேவை?
54. மயூரனின் தந்தையார் ரூபா 25.00 ஐக் கடைக்காரரிடம் கொடுத்தால் கிடைக்கும் மிதிப்பணம் எவ்வளவு? ....................................
55. 2 kg அரிசி 1kg கருவாடு வாங்க எவ்வளவு பணம் தேவை? ............
56. 2 பிடி கீரையும் 5 வாழைப்பழங்களும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ....................................
57. 10 வாழைப்பழமும் 10 எள்ளுருண்டைகளும் வாங்க எவ்வளவு பணம் தேவை? ....................................

♦ இல. 58 முதல் 62 வரை பின்வரும் சொற்களை சிங்கள எழுத்துக்களைப் பயன்படுத்தி சிங்கள மொழியில் எழுதுக.

58. ஆசிரியர் ................ 59. கரும்பலகை................
60. புத்தகம் ................ 61. வைத்தியர்................
62. கடிதம் ................

♦ இல. 63 முதல் 67 வரை பின்வரும் ஆங்கிலச் சொற்களைத் தமிழ் எழுத்துக்களைப் பயன்படுத்தித் தமிழ் மொழியில் எழுதுக.

63. Pencil ................ 64. Principal ................
65. Office ................ 66. Aunt ................
67. Plantain ................

"நான் ஒரு வைத்தியசாலைக்குச் சென்றபோது" எனும் தலைப்பின் கீழ் 68 முதல் 73 வசனங்கள் எழுதுங்கள் ஒவ்வொரு வாசனமும் குறைந்தது நான்கு சொற்கள் அடங்கியதாகவும், முற்றற்றதாகவும் இருத்தல் அவசியம் ....................................
....................................
....................................

♦ பின்வரும் பாடலை வாசித்து அதன் கீழ் கேட்கப்பட்டுள்ள வினாக்களுக்கு விடை தருக.

சின்னச் சின்னப் பூச்சட்டை சட்டை அணிவோம் மேனியிலே
சிவப்பு வண்ணப் பூச்சட்டை செருப்பை அணிவோம் காலினிலே
வண்ண வண்ணப் பூச்சட்டை பொட்டையிடுவோம் நெற்றியிலே
வாணி அணியும் பூச்சட்டை பூவை அணிவோம் கூந்தலிலே

1. வாணி அணியும் பொருட்கள் மூன்றின் பெயர் தருக?
(1) ................ (2) ................ (3) ................
2. பொட்டையிடுவோம் எனும் சொல்லைப் பிரித்து எழுதுக.
................ + ................
3. இந்தப் பாடலில் வந்துள்ள அடுக்கு மொழிச் சொல் ஒன்று தருக.
....................................

4. பூவை அணிவோம் என்ற சொற்தொடர் எந்தக் காலத்தில் அமைந்துள்ளது.
....................................

பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.
5. பூ ....................
6. சட்டை ....................
7. செருப்பு ....................
8. வண்ணம் ....................
பின்வரும் சொற்களை ஆங்கிலத்தில் எழுதுக.
9. கூந்தல் ....................
10. நெற்றி ....................

11. இப்பாடலிலிருந்து உயர்திணைப் பெயர்ச் சொல் ஒன்றினை எழுதுக.
....................................

பின்வரும் சொற்களை சிங்கள மொழியில் எழுதுக.

12. ஆம் ....................
13. ஏழு ....................
14. வானொலி ....................
15. தோடம்பழம் ....................

♦ பின்வரும் உபகாணங்களின் பெயனா ஆங்கில மொழியில் எழுதுக.

i.



........

..........

ii.



..........

கல்விச் சுற்றிலாவின்போது சென்ற மாணவர்களுள் P,O,R,S,T,U,V என்னும் ஏழு மாணவர்கள் சேகரித்த சிப்பிகளின் விபரங்கள் பற்றிய அட்டவணை யொன்றை கீழே தரப்பட்டுள்ளது. அவற்றைப் பயன்படுத்திக் கீழேயுள்ள வினாக் களுக்கு விடை தருக.




16. R இடமுள்ள சிப்பிகளின் எண்ணிக்கையிலும் 150 கூடவாக V வைத்திருந் தான் எனின் V வைத்திருக்கும் முத்திரைகளின் எண்ணிக்கையை வரைபின் உரியகட்டத்தில் குறித்துக் காட்டுக.

17. கூடுதலாக சிப்பிகளை வைத்திருப்பது யார்?

18. சமமான எண்ணிக்கையுடைய சிப்பிகளை வைத்திருப்பவர்கள் யார்?

19. S இடமும் U விடமும் இருக்கும் சிப்பிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

20 R தன்னிடமுள்ள சிப்பிகளின்கால்பங்கை Q ற்கு கொடுக்கிறான். பின்னர் T தன்னிடமுள்ள சிப்பிகளின் 1/5 பங்கை R இற்கு கொடுக்கிறான். தற்போது R இடமுள்ள சிப்பிகளின் எண்ணிக்கை யாது?

**T.அம்பிகைபாகன் B.Ed Tamil Sp. Trd ஆசிரிய ஆலோசகர், மேல்மாகாணம்**

இங்கே மடிக்கவும்



# க.பொ.த. சாதாரண தரப் பரீட்சை -2004

## தமிழ்மொழியும் இலக்கியமும்

தொகுப்பு - N.பாலா
மானிப்பாய் மெமோறியல் ஆங்கில பாடசாலை

1) பின்வரும் வாக்கியங்கள் ஒவ்வொன்றிலும் தடித்த எழுத்தில் காணப்படும் சொல் பற்றிய வினாவுக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.

1. வேட்டைக்குச் சென்ற வேடன் வழிப்போக்கனைப் பார்த்து, 'நான் முழுமகன் அல்லன்' என்று கூறினார். இங்கு முழுமகன் என்பதற்கு ஒத்தகருத்துள்ள சொல்.
(1) உயர்ந்தவன் (2) மூடன் (3) சிறுவன் (4) பயந்தவன்

2. உணவுப் பொருட்கள் வழங்குவதில் மோசடி இடம்பெற்றதாக அரசினருக்குப் புகார் செய்யப்பட்டது. இங்கே புகார் என்பதன் கருத்து.
(1) மேகம் (2) வணக்கம் (3) முறைப்பாடு (4) சன்மானம்

3. தன்வீட்டிற்கு வந்த பிச்சைக்காரனைக் குமார் நிந்தனை செய்தார். நிந்தனை என்பதன் எதிர்கருத்துடைய சொல்.
(1) சிந்தனை (2) வாசனை (3) யோசனை (4) வந்தனை

4. மகனை இழந்து விசாரமுற்றிருந்த அரசருக்கு அமைச்சர் ஆறுதல் கூறினார். இங்கே விசாரம் என்பது.
(1) கோபம் (2) வெட்கம் (3) கவலை (4) அமைதி

5. அன்னையிடம் பணம் கேட்டபோது அவர் பாராமுகமாக இருந்தமை மகனுக்கு மகிழ்ச்சியைத் தரவில்லை. இங்கே பாராமுகம் என்பது.
(1) ஆவேசம் (2) உற்சாகம் (3) அலட்சியம் (4) சோம்பல்

2) வெற்றிடத்தை நிரப்புவதற்கு மிகப் பொருத்தமான சொல்லைத் தெரிவு செய்க.

6. நாடாளுமன்றத்தில் ஆளும் கட்சி உறுப்பினர் கொண்டுவந்த ...................... எதிர்கட்சித் தலைவரால் அனுமதிக்கப்பட்டது.
(1) பிரேரணை (2) அறிக்கை (3) பிரகடனம் (4) பிரமாணம்

7. காசிம் அனுப்பிய ............ க் கொடுத்துத் தபால் நிலையத்தில் ஐந்து ரூபாவைப் பெற்றுக்கொண்டேன்.
(1) பணம்பெற்ற சிட்டையை (2) காசோலையை
(3) காசேட்டை (4) அஞ்சற்கட்டளையை

8. தாயார் மருத்துவரைக் ...... அழைத்து வருமாறு என்னை அனுப்பினார்.
(1) கையும் மெய்யுமாக (2) கைத்தூட்டாக
(3) கணிப்பீடு (4) கையோடு

9. தருமர் நாடுநகரெல்லாவற்றையும்....... வைத்துச் சூதாடினார்.
(1) ஒற்றியாக (2) சிந்தனை (3) பயணமாக (4) அடியீடாக

10. இந்த ஆண்டு காலித்துறைமுக வேலைகளுக்காகப் பணம் ........... செய்யப்படவில்லை.
(1) கணிப்பீடு (2) ஒதுக்கிடு (3) அடியீடு (4) பங்கீடு

11. ஒரு நாட்டின் தமது பிரிவு, இனம் என்பவற்றுக்காக உணர்ச்சி வசப்பட்டு உழைப்பவர்.
(1) தேசியவாதி (2) வகுப்புவாதி (3) யதார்த்தவாதி (4) நதிவாதி

12. செய்யுள்களிலே சீர்களின் முதலெழுத்து ஒன்றின் வரவும், உரை நடைகளிலே வாக்கியம் சொற்களின் முதலெழுத்து ஒன்றிவரவும், தொடுப்பது.
(1) மோனை (2) எதுகை (3) இயைபு (4) முரண்

13. எதிர்கால நிகழ்வுகளை முன்கூட்டியே மக்களுக்குச் சொல்பவன்.
(1) சன்னியாசி (2) வரகவி (3) தீர்க்கதரிசி (4) புலவன்

14. வியாபாரிகள் அதிக இலாபத்திற்கு விற்பதற்காகச் சில பொருட்களை வேண்டுமென்று பதுக்குவதால் உருவாகும் நிலை.
(1) தட்டுப்பாடு (2) கட்டுப்பாடு (3) பட்டினி (4) பற்றாக்குறை

15. ஒரு விருந்தாளி மணமக்களுக்குச் சென்று வழங்கும் பொருள்.
(1) பரிசு (2) நன்கொடை (3) கையுறை (4) பாடல்

16. ஒரு பொருளின் இன்றியமையாமை, அப்பொருள் இல்லாதபோது தான் நன்கு தெரியும் இந்த விளக்கத்தைக் கொண்ட பழமொழி.
(1) உடல் உள்ளவரை கடல்கொள்ளாக் கவலை
(2) நெருப்பு இல்லாமல் புகை எழுமா
(3) அப்பன் அருமை மாண்டால் தெரியும்.
(4) ஆலையில்லா ஊருக்கு இலுப்பைப்பூ சக்கரை

17. எவ்வளவுதான் முயன்றாலும் ஒருபொருளின் இயற்கையான குணத்தை இன்னொன்றாக மாற்ற முடியாது. இதனை விளக்கும் பழமொழி.
(1) எத்தனை புடம் இட்டாலும் இரும்பு பசும்பொன் ஆகுமா?
(2) அடிவேல் அடி அடித்தால் அம்மியும் நகரும்
(3) கழுதை தேய்ந்து கட்டெறும்பு ஆயிற்று
(4) தெற்கே அடித்த காற்று திரும்பி அடிக்குமா?

18. சான்றோரின் உபதேச மொழிகளைத் தலைமேற்கொள்ளல் பெரும் பயனளிக்கும் தலை மேற்கொள்ளல் என்னும் மரபுத் தொடர் உணர்த்தும் பொருள்.
(1) எழுதி வைத்தல் (2) விருப்புடன் ஏற்றல்
(3) ஒலிப்பதிவு செய்தல் (4) பிறருக்குச் சொல்லல்

19. கலக்கமடைதல் என்னும் பொருள்தரும் மரபுத் தொடர்.
(1) தலைமயங்குதல் (2) தலைமுழுகுதல்
(3) தலைதடுமாறல் (4) தலைகாட்டுதல்

20. நிலையில்லாத மனித வாழ்க்கையை விளக்குவதற்குப் பொருத்தமான மரபுத் தொடர்.
(1) நீர்வழிப்படும் புனை போல (2) நீரிற் குமிழி போல
(3) நீர்குட் பாசி போல (4) நீர்மேல் எழுத்துப் போல

21. முற்றாகவும், எச்சமாகவும்வழங்கும் ஓர் வினைச்சொல்.
(1) உண்னும் (2) வந்தனை (3) இல்லை (4) ஓதுக

22. பஞ்சு என்பது.
(1) வன்றொடர், குற்றியலுகரம் (2) மென்றொடர், குற்றியலுகரம்
(3) நெடித்தொடர், குற்றியலுகரம் (4) உயிர்த்தொடர், குற்றியலுகரம்

23. கடிநாயுடன் காடு புகுந்த கந்தப்போடியைக் கருநாகம் தீண்டிவிட்டது. இந்த வாக்கியத்தில் உள்ள தொகைகள்.
(1) வினைத்தொகை, வேற்றுமைத்தொகை , பண்புத் தொகை
(2) வேற்றுமைத்தொகை, உவமைத் தொகை, அன்மொழித் தொகை
(3) வினைத்தொகை, பண்புத் தொகை, உம்மைத்தொகை
(4) அன்மொழித்தொகை, வேற்றுமைத் தொகை, உம்மைத்தொகை

24. மனம் + நிலை என்பதைப் புணர்த்தினால் வரும் புணர்மொழி வடிவம்.
(1) மனோநிலை (2) மனோனிலை (3) மனனிலை (4) மனநிலை

25. குற்றேவல் என்பதைப் பிரித்து எழுதும் முறை.
(1) குற்று + ஏவல் (2) குறுமை + ஏவல்
(3) குறு+ ஏவல் (4) குறிய +ஏவல்

26. முழுமதியே நீ வானத் தடாகத்தில் மலர்ந்த வெண்டாமரையோ? இங்கு வானத் தடாகம் என்ன அணியாகும்?
(1) உவமை (2) உருவகம்
(3) உயர்வுநவிற்சி அணி (4) தற்குறிப்பேற்றம்

27. வெற்றிலை என்பது ஆகுபெயராக வந்த தொடர்.
(1) வெற்றிலை நட்டான் (2) வெற்றிலைப் பெட்டி
(3) வெற்றிலை தின்றான் (4) வெற்றிலை பாக்கு

28. தான் என்னும் இடைச்சொல்லைப் பெறாத வாக்கியம்.
(1) அப்துல்காதர் அதைத்தான் சொன்னார்.
(2) தான் மெய்யனென்று தாமோதரன் நிரூபித்தான்.
(3) உண்மையைத்தான் நீ கூறினாயா?
(4) அவன்தான் கவிதை எழுதினானா?

29. செயப்படுபொருளுள் ஏற்காத வினைமுற்றுவாக்கியம்
(1) சோமன் பால் குடித்தான் (2) நாகன் நடந்த வந்தான்.
(3) அவன் சாப்பிட்டான் (4) அரம்பையின் கிழ்க் கன்றும் உதவுங்கனி

30. பின்வருவனவற்றில் துணைவினை எதில் இடம்பெறுகின்றது?
(1) செய்து முடித்தான் (2) பார்த்துவிட்டான்
(3) ஓடி முடித்தான் (4) மெல்லப்பார்த்தான் (தொடரும்...)

# மேலும் இரண்டு சாரதிகள் ஈராக்கில் கடத்தப்பட்டனர்

ஈராக்கில் கடந்தவாரம் கறுப்புக் கொடிகள் என்ற தீவிரவாதிகள் அமைப்பு 3 இந்தியர்கள் உட்பட 7 பேரைக் கடத்திச்சென்றனர்.

திலக்ராஜ், அந்தர் ஜாமி, யக்தேவ் சிங் என்ற 3 இந்தியர்களும், இமாச்சலப் பிரதேசம் மற்றும் பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்தவர்கள். பணயக்கைதிகளாகப் பிடித்துச் செல்லப்பட்டவர்களில் 2 பேர் கென்யா நாட்டவர், இன்னொருவர் எகிப்து நாட்டவர்.

ஈராக்கில் அவர்கள் ஒரு குவைத் நிறுவனத்தில் சாரதிகளாகப் பணியாற்றியவர்கள்.

ஈராக்கிலிருந்து அந்த குவைத் நிறுவனம் வெளியேறவேண்டும், அமெரிக்கர்களால் கொல்லப்பட்ட ஈராக்கியர்களுக்கு நஷ்டஈடு வேண்டும். அமெரிக்க மற்றும் குவைத்தில் உள்ள சிறைக்கைதிகளை விடுவிக்கவேண்டும் என்ற நிபந்தனைகளை விதித்த தீவிரவாதிகள், பணயக்கைதிகளை 3 நாளுக்குக்கு ஒருவர் வீதம் தலை துண்டித்து கொலை செய்யப்போவதாகவும் மிரட்டல் விடுத்தனர்.

கடத்தப்பட்ட இந்தியர்களை மீட்க இந்தியா தீவிரமுயற்சி எடுத்ததைத் தொடர்ந்து, தீவிரவாதிகள் தங்கள் காலக்கெடுவை நீடித்து இருக்கிறார்கள். பேச்சுவார்த்தை நடத்த பழங்குடி இனத்தலைவர் ஷேக்ஷி சாம் அல் கலாவி என்ற பழங்குடி இனத்தலைவரையும் தீவிர வாதிகள் நியமித்துள்ளனர்.

பேச்சுவார்த்தைக்குப் பிறகு இந்தியர்கள் எப்போது விடுதலை ஆவார்கள் என்று ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்ட நிலையில், தீவிரவாதிகள் மேலும் 2 பேரை கடத்திச் சென்றனர். கடத்தப்பட்ட இருவரும் ஜோர்தான் நாட்டைச் சேர்ந்தவர்கள். இவர்களும் சாரதிகளாக, ஈராக்கில் பணிபுரிந்தவர்கள்.

ஏற்கனவே ஜோர்தான் நாட்டைச் சேர்ந்த தூதரக அதிகாரி ஒருவரை சில நாட்களுக்கு முன்பு கடத்திச் சென்றனர். இப்போது அவரை தீவிரவாதிகள் விடுதலை செய்தனர்.

சில நாட்களுக்கு முன்பு ஈராக்கில் பாகிஸ்தானைச் சேர்ந்த ஒரு பொறியிலாளர் மற்றும் சாரதியை காணவில்லை என்று கூறப்பட்டது. அவர்களை நாங்கள் கடத்தி இருக்கிறோம். அவர்கள் எங்களிடம் பணயக்கைதிகளாக உள்ளனர் என்று தீவிரவாதிகள் அறிவித்துள்ளனர்.

தீவிரவாதிகள் 3 இந்தியர்களை விடுவிக்க இப்போது புதிய நிபந்தனை விதித்துள்ளார்கள். காஷ்மீர் தீவிரவாதிகள் மீது இராணுவத்தினர் நடத்தும் தாக்குதலை நிறுத்தவேண்டும் என்றே நிபந்தனை விதித்துள்ளனர்.

## கலைஞர்கள் எதிர்ப்பு பேரணி

போர்வேண்டாம், எங்கும் அமைதிவேண்டும் என்று போராடுகிறார்கள் இந்தக் கலைஞர்கள். அமெரிக்கா மற்ற நாடுகள் மீது படையெடுக்கும் போக்கை கைவிடவேண்டும் என்று வலியுறுத்தி பெண் கலைஞர்கள் அமெரிக்காவின் மசாச்சூட்டல் பகுதியில்



உள்ள பாஸ்டன் நகரில் பொலிஸ் அலுவலகம்முன் அணிவகுப்பு நடத்தினார்கள்.

அவர்கள் அமெரிக்கக் கொடிகளை இடுப்பில் சுற்றிக்கொண்டு வந்தனர். இந்த நிலையில், பாஸ்டன் நகரில் 29 ஆம் திகதிவரை ஜனநாயக உரிமை மாநாடு நடைபெறுகிறது.

## குண்டுக் குழந்தைகள் சீனாவில் அதிகரிப்பு

உலகிலேயே அதிக மக்கள் தொகை கொண்ட நாடு சீனா. குண்டுக் குழந்தைகள் இருப்பதும் சீனாதான். சீனாவில் பொருளாதாரம் சீரடைந்து இருப்பதாலும், ஒரு குடும்பத்துக்கு ஒரு குழுந்தை என்ற கொள்கையை மக்கள் பின்பற்றுவதாலும், இருக்கும் ஒரே குழந்தையை பெற்றோர் அந்தக் குழந்தைக்கு கண்டபடி விரும்பிய உணவுகளையெல்லாம் கொடுத்து வருகிறார்கள்.

இதனால், குழந்தைகள குண்டாகிவிடுகின்றனர். சீன அரசு இப்போது விழித்துக்கொண்டது. குண்டுக் குழந்தைகளுக்கு உணவுக் கட்டுப்பாடு, உடற்பயிற்சி ஆகியவற்றை அளித்து வருகிறார்கள். பள்ளிக்கூடங்களில் 2வாரம் இது தொடர்பாக பயிற்சி அளிக்கப்படுகிறது. இதை கட்டாய பாடமாக ஆக்கவும் சீன அரசு ஆலோசித்து வருகிறது.

## சம்பளம் இல்லாமல் உழைக்கும் குரங்குகள்



தாய்லாந்தின் நாராதிவாத் மாகாணத்தில் ஏராளமான குரங்குகள் உள்ளன. இந்தக் குரங்குகள் சாதாரண குரங்குகள் அல்ல. கட்டுப்பாடும், ஒழுக்கமும் நிறைந்த ஊழியர்கள் போல இந்தக் குரங்குகள் வேலை செய்கின்றன. தென்னை மரத்தில் ஏறி தேங்காய்களை பறித்துப் போடுகின்றன.

குரங்குகளுக்கு இதுபோன்ற பயிற்சிகளை அளித்து, அந்தக் குரங்குகளை பல்வேறு பணிகளில் ஈடுபடுத்துகின்றனர். வயலில் இறங்கி களை பறிக்கின்றன. சின்னச் சின்ன மற்ற வேலைகளைச் செய்யவும் குரங்குகளைப் பயன்படுத்துகிறார்கள் ஆனால், இந்தக் குரங்குகளுக்கு சம்பளம் மட்டும் கொடுப்பது இல்லை.

## இங்கிலாந்திலும் மணல் சிற்பக் கண்காட்சி



ஓவியப் போட்டி நடத்துவது போல, மணற்சிற்பப் போட்டி நடத்துவது இப்போது பல நாடுகளிலும் பிரபலம் அடைந்து வருகிறது. பிரேஸில் நாட்டில் பிரபலமான மணற்சிற்பங்கள் இப்போது தாய்லாந்து, சீனா ஆகிய நாடுகளிலும் பரவியுள்ளது.

இப்போது இங்கிலாந்திலும் மணற்சிற்பக் கண்காட்சிப் போட்டிகள் நடைபெற்று வருகிறது. கிரேட்யார்மத் கடற்கரையில் நடந்த மணறசிற்பக் கண்காட்சியில் ஹொலன்டில் இருந்துவந்த ஒரு சிற்பி மணலில் யானைச் சிற்பம் உருவாக்கிய காட்சி.

## ஈராக்கில் வைத்து கடத்தப்பட்ட எகிப்து இராஜதந்திரி விடுதலை!

கடந்த வெள்ளிக்கிழமை ஈராக்கில் வைத்து இஸ்லாமியப் போராளிகளால் கடந்தப்பட்ட எகிப்து நாட்டு இராஜதந்திரி விடுதலை செய்யப்பட்டார்.

இராஜதந்திரியான மொகமட் ம:. மூத் குதுப் என்பவர் மிகவும் நன்நடத்தையுடையவராகவும், மத நம்பிக்கையுடையவராகவும் இருந்தபடியால், அவரைத்தாம் விடுதலை செய்வதாக கடத்தல்காரர்கள் தெரிவித்தனர்.

கடத்தல்காரர்களின் அறிக்கை அராபியத் தொலைக்காட்சியான அல் ஜசீராவில் ஒளிபரப்பப்பட்டது.

இறைவனுக்கும் தனது விடுதலைக்காக உழைத்த அனைவருக்கும் தான் நன்றியைத் தெரிவிப்ப



தாக குதுப் தெரிவித்தார்.

தான் விடுதலை செய்தது தொடர்பாக ஈராக்கிலிருந்து தொலைபேசி மூலம் தனது நாட்டு அதிகாரிகளுக்குத்தெரிவித்த குதுப் மேலதிக தகவல் எதனையும் தெரிவிக்கவில்லை.

எகிப்திய இராஜதந்திரி கடத்தப்பட்டமைக்கு அந்த நாடு ஈராக்கியப் படைகளுக்கு பயிற்சி அளிக்க உறுதியளித்ததே காரணமென கடத்தல்காரர்கள் தெரிவித்தனர்.

ஆனால், தமது படைகளை ஈராக்கிற்கு அனுப்புவதற்கான எந்தத் திட்டமும் இல்லையென எகிப்திய அரசாங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை - கடத்தல் காரர்களின் கோரிக்கைக்கு எகிப்திய அரசாங்கம் பணிந்துவிடக் கூடாதென ஈராக்கின் இடைக்காலப் பிரதமர் இயட் அலாவி கேட்டுக் கொண்டார்.

கடந்தவாரம் எகிப்திற்கு சென்ற அலாவி ஈராக் படைகளுக்கு, எகிப்திய படையினர் பயிற்சியளிப்பது தொடர்பாக கலந்துரையாடியதாகவும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

## வடகொரிய மக்கள் 200 பேர் தென்கொரியாவிற்கு வருகை



வடகொரியாவிலிருந்து 200 அகதிகள் பெயர் குறிப்பிடமுடியாத மூன்றாம் நாடொன்றினூடாக தென் கொரியாவுக்குள் சென்றுள்ளனர்.

வடகொரியாவிலிருந்து வந்த மிகப்பெரிய அகதிகள் தொகை இதுவெனத் தெரிவிக்கப்படுகிறது. இன்னும் 200 அகதிகள் வரவுள்ளதாக எதிர்பார்க்கப்படுகிறது.

கடந்த மே மாதம் இவர்கள் சீனா ஊடாக வியட்னாமிற்கு சென்று, அங்கு வாழ்ந்து வந்ததாகவும், வியட்னாமிய அரசு இவர்களை மீளவும் சீனாவுக்கு திருப்பி அனுப்பப் போவதாக அச்சுறுத்தியதையடுத்தே தென் கொரிய அரசாங்கம் இவர்களைத் தமது நாட்டிற்கு வியட்னாமிலிருந்து அழைத்துள்ளது.

இரண்டாவது தொகுதி அகதிகள் இன்று தென் கொரியாவுக்கு வருவார்கள் என எதிர்பார்க்கப்படுகிறது. இன்று வரும் அகதிகளுடன் சேர்த்து மொத்தம் 460 அகதிகள் வடகொரியாவிலிருந்து தென் கொரியாவுக்கு செல்வதாக தெரிவிக்கப்படுகிறது.

இதேவேளை, தென்கொரியாவுக்கு சென்றுள்ள 200 குடும்பங்களினதும் குடும்ப உறவுகள் வடகொரியாவில் வசித்து வருவதானால் அவர்




களுக்கு அங்கு பாதுகாப்பு அச்சுறுத்தல் இருப்பதாக பி.பி.ஸி. செய்தியாளர் தெரிவித்தார்.

வடகொரியாவிலிருந்து வருடமொன்றுக்கு ஆயிரம் பேர்வரை தென்கொரியாவுக்கு அகதிகளாகச் செல்வதாக செய்திகள் தெரிவிக்கின்றன.

## சீன உள்ளூர் விமானமொன்று இளைஞர் ஒருவரால் கடத்தல்!

சீனாவில் உள்ளூர் விமான சேவையில் ஈடுபடும் விமானமொன்று நேற்று முன்தினம் கடத்தப்பட்டதாகவும், பின்னர் அந்த விமானக்கடத்தலுக்கான தீவு வெற்றிகரமாக முடிவிற்குக் கொண்டு வரப்பட்டதாகவும் சீன அரசு தெரிவித்தது.

விமானம் தனது பறப்பை ஆரம்பித்து ஐம்பது நிமிடங்களின் பின்னர் இளைஞர்ஒருவர், தான் விமானத்தைக் கடத்துவதாகவும், விமானத்தை தென்கொரியா நோக்கி திருப்புமாறும் தெரிவித்தார்.

பின்னர் மிகவும் அவசரமான நிலையில் விமானம் சீனாவின் மத்தியபகுதியான செங்சூ விமான நிலயத்தில் தரையிறக்கப்பட்டு, குறித்த இளைஞரை பொலிஸார் விமானத்திலிருந்து வெளியே அகற்றியதாகவும் சீன அரசு வெளியிட்ட செய்திக்குறிப்பு தெரிவித்தது. விமானத்தைக்கடத்தியவர் முப்பது வயதான இளைஞரெனவும், மனநிலை பாதிக்கப்பட்டவரெனவும் சனாவின் விமானப் போக்குவரத்து அதிகாரிகள் தெரிவித்தனர்.

இது ஒரு கடத்தலல்ல இதனை நாங்கள் பெரியவிடயமாக எடுக்கவில்லையென சீன விமானப் போக்குவரத்து பெண் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த விமானத்தைக் குறித்த இளைஞர் எவ்வாறு கடத்தமுயன்றார் என்றோ, இந்தக்கடத்தல் பிரச்சினை எவ்வாறு முடிவிற்குக் கொண்டுவரப்பட்டதென்றோ தகவல்கள் சரியாகத் தெரியவரவில்லையென செய்திகள் தெரிவிக்கின்றன.

## அதி உயர் பாதுகாப்பு நிலையிலுள்ள அவுஸ்ரேலிய சிட்னி விமான நிலையம்

அவுஸ்ரேலியாவின் சிட்னி விமான நிலையம் அதியுயர் பாதுகாப்பு நிலையில் வைக்கப்பட்டுள்ளது. இதற்குச சிட்னி விமான நிலையத்திலிருந்து அமெரிக்காவில் லொஸ்ஏஞ்சல் விமான நிலையத்திற்கு 246 பயணிகளுடன் சென்ற விமானம் பாதுகாப்பு அச்சுறுத்தல் காரணமாக மீளவும், புறப்பட்ட இடமான சிட்னி விமான நிலையத்திற்கு திரும்பியதே காரணமாகும்.

246 பயணிகளுடன் சுமார் ஒன்றரை மணி நேரமாக பயணித்த விமானம், ஏதோவொரு அச்சுறுத்தல் காரணமாக மீளவும் பாதுகாப்பான முறையில் சிட்னி விமான நிலையத்திற்குத் திரும்பியுள்ளது.

ஆனால், இந்த அச்சுறுத்தலுக்கான காரணம் என்னவென்று தெளிவாகத் தெரியவரவில்லை.

விமான ஓட்டிகளின் அறையை உடைத்துக்கொண்டு சிலர் செல்ல முற்பட்டதே இந்த அச்சுறுத்தலுக்கான காரணமென உள்ளூர் ஒளிபரப்பு நிலையம் தெரிவித்த செய்தியை சிட்னி விமான நிலையத்தின் பெண் பேச்சாளர் மறுத்தார். ஆனாலும், மேலதிக தகவல் எதனையும் அவர் வெளியிடவில்லை.

தரையிறங்கிய விமானத்திலிருந்த 246 பயணிகளும், 18 விமான சிப்பந்திகளும், பாதுகாப்பான முறையில் விமானத்திலிருந்து பஸ்மூலம் கொண்டுசெல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

அரசியல் நோக்கு...

- பரணி

# யுத்தத் தயாரிப்புக்கள் மத்தியில் மன்னிப்பு நாடக அரங்கேற்றம்




1983 ஆம் ஆண்டு இடம்பெற்ற பேரினவாத வன்செயலுக்கு, இலங்கையின் குடியரசுத் தலைவி மன்னிபபுக் கேட்டுள்ளார். இது ஊடகங்களினால் பெரிதுபடுத்தப்பட்டு வெளியிடப்படுகின்றது. இதற்கான உண்மைக் காரணம் என்ன? இந்த மன்னிப்பைக் கேட்க சந்திரிகா ஏன் துணிந்தார்? என்பது பெரிய ஆய்வுக்குரியதல்ல. ஏனெனில், சந்திரிகா சண்டையை வெறுப்பவருமல்ல, சமாதானத் தேவதையுமல்ல. உலகை ஏமாற்றி, தனது சண்டையைச் சமாதானமாக முன்னெடுக்க - ஆயத்தங்கள் செய்து கொண்டு, 1983 ஆம் ஆண்டு வன்செயலுக்கு மன்னிப்புக் கேட்கினறார். அவ்வளவே.

இரண்டாவது உலகப் பெரும் போரில் செய்த அட்டூழியங்களுக்காகத் தற்பொழுது நாட்டின் தலைவர்களாயிருப்பவர்கள் மன்னிப்புக் கேட்பது தற்பொழுது ஒரு நிகழ்வாக உள்ளது.

சில தலைவர்கள் உண்மையை உணர்ந்து மன்னிப்புக் கேட்கின்றார்கள். வேறு சிலர் - தாம் அட்டூழியங்களைச் செய்த நாடுகளுக்குப் பயணிக்கும்பொழுது, அநத நாட்டு மக்களின் உட்கோபத்தைத் தணிப்பதற்காக, அந்த நாட்டு மக்களின் எதிர்ப்பைச் சமாளிப்பதற்காக மன்னிப்புக் கேட்கின்றார்கள்.

ஆனால், சில தலைவர்கள் மன்னிப்பு என்ற சொல்லைப் பாவிக்க விருப்பமில்லாமல், தமது நாடு பிழை செய்தது என்பதை ஏற்றுக்கொள்ள மனமில்லாமல், தாம் பயணிக்கும் நாட்டு மககளைச் சமாளிக்கும் முயற்சியில் வருந்துகின்றோம், கவலைப் படுகின்றோம் போன்ற சொற்களைப் பயன்படுத்தி, மன்னிப்பு என்ற இடத்திலிருந்து தப்பி விடுகின்றார்கள். இவை இன்று சண்டையில்லாமல், ஆக்கிரமிப்பு இல்லாமல், நட்பாக இருக்கும் நாடுகளுக்கிடையில் நடைபெறும் மன்னிப்பு நாடகங்களாகும்.

**அதற்குப் பின்னர் பேரினவாத வன்செயல் பெரிய அளவில் நடை பெறுவதில்லை. இதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலம்தான். ஆயுதமற்றிருந்த வேளையில் தமிழினத்தை ஆயுதங்கள் மூலமும் காடையர்களின் அட்டூழியங்கள் மூலமும் அடக்கிப் பணிய வைக்க முயன்ற பேரினவாதிகள் - தமிழ் மக்கள் ஆயுதம் எடுத்தவுடன் தமது வன் செயல்களைத் தொடர முடியாமல் உள்ளனர்.**

ஆனால், சந்திரிகா அம்மையாரின் மன்னிப்பு நாடகத்தின் உள் நோக்கம் எத்தன்மையானது? இதன் தற்போதைய அவசரம் என்ன? சண்டை முடிந்து 'சமாதானம்' மலர்நது விட்டதா? அப்படியில்லாத நிலையில், யுத்தக்கப்பல்களை, குண்டுவீச்சு விமானங்களை, சிறப்புப் பயிற்சிகளைப் படையினருக்கு வழங்கி, சமாதானப் பேச்சை இழுத்தடித்துக் கொண்டு - டக்ளஸையும், கருணாவையும் வைத்து, தமிழனத்தைக் கூறுபோட முயற்சித்துக் கொண்டு, 1983 ஆம் ஆண்டு இனக்கலவரத்துக்கு மன்னிப்புக் கோருவது எதனால்?

1983 ஆம் ஆண்டு வன்செயலுக்கு மன்னிப்புக் கேட்கும் சந்திரிகா - தனது தற்போதைய செயல்களுக்கு எபபொழுது மன்னிப்புக் கோரப்போகின்றார் என்று நமது ஈழநாடு ஆசிரியர் தலையங்கம் 24.07.2004 ஆம் திகதியில் அழகாகவும், ஆழமானதாகவும் சிந்திக்க வைத்துள்ளது.

"1995 ஆம் ஆண்டு முதல் 2002 ஆம் ஆண்டு வரையிலான ஏழாண்டு காலத்தில்தான் இதே ஜனாதிபதியின் போர் நெறிப்படுததலில நவாலி சென்பீட்டர்ஸ் தேவாலயம், நாகர்கோவில், சுதந்திரபுரம், மந்துவில் எனத் தொடர் குண்டுவீச்சுப் படுகொலைகளும், ஆயிரக்கணக்கில் அப்பாவித் தமிழ் மக்கள் காணாமற்போன வரலாறும், செம்மணிப் புதைகுழி விவகாரமும் - வெற்றிகரமான இனவெறி நடவடிக்கைகளாக நடந்தேறின.

இவற்றிற்கெல்லாம் பகிரங்கமாகத் தமிழ் மக்களிடம் யார்? எப்போது மன்னிப்புக் கேட்கப்போகிறார்களாம்? என்று ஈழநாடு ஆசிரியர் தலையங்கம் கேட்டுள்ளது.

இதற்குப் பதில் எவரும் கூறப் போவதில்லை. ஏனெனில், இந்தக் காலத்தில் நடந்தவைகள் - சமாதானத்தைக் கொண்டுவர, சந்திரிகா சண்டையிட்ட காலத்தில் நடந்தவைகளாகும். எனவே, மன்னிப்புக் கேட்க வேண்டிய தேவை சந்திரிகாவுக்கே தவிர, வேறு எவருக்குமேயில்லை.

சந்திரிகா - இந்த 1983 ஆம் ஆணடைக் கையிலெடுக்கவும், மன்னிப்புக் கேட்கவும் இரண்டே இரண்டு காரணங்களே உள்ளன. முதலாவது காரணம் - 1983 ஆம் ஆண்டு வன் செயல் நடைபெற்றபொழுது ஆட்சியிலிருந்தது ஐக்கிய தேசியக் கட்சியாகும்.

சந்திரிகா ஆட்சிக்கு வந்த போது, 1983 ஆம் ஆண்டில் வன்செயலை விசாரிக்க - ஒரு ஆணைக் குழுவை அமைதது, அதனைத் தனது அரசியல் நலன்களுக்குப் பயன்படுத்த முனைந்தார்.

அப்பொழுது தேர்தல் நடைபெறவில்லை, ஆட்சி மாற்றம் ஏற்படவில்லை. ஐ.தே.கட்சி ஆட்சியிலிருந்தது. எனவே, விசாரணைக்குழுவை அமைத்து, ஐ.தே.கட்சி அரசுக்கு இடைஞ்சலை ஏற்படுத்த அவர் திட்டம்தீட்டிச் செயறபட்டார்.

தற்பொழுது சிறுபான்மை அரசை அமைத்துக் கொண்டு, தமிழ் மக்களை ஏமாற்ற - விசாரணைக்குழு அறிக்கையைப் பயன்படுத்தி நாடகமாடுகின்றார் சந்திரிகா.

1983 ஆம் ஆண்டு வன்செயல் பெரியளவிலான தாக்கத்தை வெளிநாடுகளில் ஏற்படுத்தியிருந்தது உண்மைதான். ஆனால், 1985 ஆம் ஆண்டு இடம்பெற்ற தமிழர்கள் மீதான வன்செயல் சாதாரணமான ஒனறல்ல. அதுவும் மிகவும் பயங்கரமான வன்செயலே.

அப்பொழுது வெளிநாட்டு ஊடகத்துறையினர் இந்தத் தீவுக்கு வருவது தடுக்கப்பட்டுத், தமிழ்த் தலைவர்கள் தடுப்புக் காவலில் வைக்கப்பட்டுக் கொடுமைகள் பல நடந்தகாலம். பி.பி.சி, றொயிற்றர் நிருபர்கள் இந்த வன்செயல்களைப் பற்றி செய்திகளை வெளியிட்டனர்.

ஆனால், 1983 ஆம் ஆண்டு இதர நாடுகள் நோக்கிய விதத்தில் 1958 ஆம் ஆண்டு வன்செயல்களைப் பார்க்கவில்லை எனலாம். இதற்கு மற்றொரு காரணம்- அப்பொழுது கியூபா புரட்சி உலக நாடுகளின் கவனத்திலிருந்ததாகும். அடுத்ததாக 1983 ஆம் ஆண்டு இந்தியாவின் பிரதமராக இருந்த இந்திரா காந்தி இந்த வன்செயலை நோக்கிய முறை [illegible] உலக அரங்கில் முதன்மை பெறச் செய்தது.

அததுடன் 1958 ஆம் ஆண்டில் இல்லாத சொததழிவு, மனித உயிரழிவு என்பன 1983 ஆம் ஆண்டில் மிக அதிகம் என்பது மறுக்கமுடியாத உண்மையாகும். இதற்கு ஒரு காரணம் 25 ஆண்டுகளில் ஏற்பட்ட பொருளியல் வளர்ச்சியும் ஒரு காரணமாகலாம். எது எப்படியிருந்தாலும் சந்திரிகா 1983 ஐ மட்டும் எடுத்தற்கு வேறு ஒரு காரணமும் உண்டு.

1956, 1958 ஆகிய ஆண்டுகளில் வன்முறை நடைபெற்ற பொழுது ஆட்சியிலிருந்தவர் சந்திரிகாவின் தந்தையார் காலம் சென்ற பண்டாரநாயக்க. அதன் பின்னர் அறவழியில் உரிமைக்காகப் போராடிய தமிழ் மக்கள் மேல் அரச படையினரை ஏவி நள்ளிரவு நேரத்தில் பெண்களை எல்லாம் கைது செய்து, தமிழரசுரத் தலைவர்களைச் சிறைப்படுத்தி நாட்டில் இராணுவ ஆட்சியை கொண்டு வந்தவர் 1961 இல் சந்திரிகா அம்மையாரின் தாயார் சிறிமாவோ பண்டாரநாயக்க இதன் பின்னர் 1972 இல் சிங்கள பௌத்த குடியரசு என்றை பெயரில் தமிழினத்தை நிரந்தரமாக இரண்டாவது குடிமக்களாக மாற்றிய அரசியல் திட்டத்தைக் கொண்டு தவரும் சிறிமாவோ பண்டாரநாயக்கவே தான்.

எனவே தனது தகப்பனாரின், தாயாரின், தனது ஆட்சிக்காலத்தில் நடந்தவைகள் எதற்கும் மன்னிப்புக் கோரியறியாத சந்திரிகா அம்மையார் ஐ.தே.கட்சி கால பேரினவாத வன்செயலுக்கு மன்னிப்புக் கோருவது வெறும் அரசியல் சித்து விளையாட்டேயாகும்.

அத்துடன் உலகம் இத்தீவைப் பார்த்துக் கொண்டிருக்கின்றது. நோர்வேயின் சமாதான முயற்சி வெற்றிபெறுமா? என எல்லோர் மனதிலும் கேள்வி எழுந்துள்ளது. சமாதான முயற்சிகளைக் குழப்பும் நோக்குடன், ஜே.வி.பி.யுடன் கூட்டுச் சேர்ந்து ஆட்சியைக் கலைத்து, தேர்தல் நடத்திய சந்திரிகா இன்று சிறுபான்மை அரசொன்றை தலைமை தாங்கி நடத்துகின்றார். அவருக்கு உதவியாகக் கதிர்காமர் என்றொரு அமைச்சர் வெளிநாடுகளுக்குச் சென்று தமிழர் விரோதப் பரப்புரைகளைச் செய்து வருவதுடன், வெளிநாடுகளின் இராணுவ உதவிகளையும் திரட்ட முயற்சிக்கின்றார்.

இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சுக்களை தொடங்கிச் சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடங்கப் புலிகள் சம்மதம் தெரிவித்த பின்னரும், ஏதோ சாக்குப் போக்குக் கூறி இழுத்தடிக்கும் அரசுக்கு, இடைக் காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான ஜே.வி.பி.யை விட்டால் ஆட்சி கவிழும் அபாயம்!

எனவே சந்திரிகா மக்களைத் திசைதிருப்ப 1983 ஐக் கையிலெடுத்துக் கொண்டு திரிகின்றார். இதற்குக் கருணா என்றொரு தனிநபரை வைத்து வன்செயல்களைத் தென் தமிழீழத்தில் செயற்படுத்தும் நடவடிக்கைகளின் தீவிரம். நாட்டை யுத்த விளிம்புக்குள் கொண்டு செல்கின்றது.

இந்த நிலையில், அமைச்சர் கதிர்காமர் வெளிநாட்டில் கூறுகின்றார் - 'புலிகள் இரண்டுபட்டுவிட்டார்கள். யாருடன் பேசுவது என்று தெரியாமல் உள்ளது என்று.

**இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபை பற்றிய பேச்சுக்களை தொடங்கிச் சமாதான முயற்சிகளை விட்ட இடத்திலிருந்து தொடங்கப் புலிகள் சம்மதம் தெரிவித்த பின்னரும், ஏதோ சாக்குப் போக்குக் கூறி இழுத்தடிக்கும் அரசுக்கு, இடைக்காலத் தன்னாட்சி அதிகார சபைக்கு எதிரான ஜே.வி.பி.யை விட்டால் ஆட்சி கவிழும் அபாயம்!**

இங்கே சந்திரிகா கூறுகின்றார் விடுதலைப் புலிகளிடமிருந்து பதிலை எதிர்பார்த்திருப்பதாக ஜே.வி.பி. கூறுகின்றது. தன்னாட்சி அதிகாரசபை பற்றியே பேசக்கூடாது என்று ஆளும் கட்சி ஒரு நிலையான உறுதிப்பாட்டில் இல்லை.

இவ்வேளையிலேயே 1983 ஜூலைக் கலவரத்திற்கு மன்னிப்புக் கேட்பதினால் தானொரு சமாதான விரும்பி என உலகுக்குக் காட்டி, உலகை ஏமாற்ற முனைகின்றார் ஜனாதிபதி. நான் சமாதானத்தை விரும்புகின்றேன். 1983 ஆம் ஆண்டு நடந்தவற்றுக்கு மன்னிப்புக் கேட்டுள்ளேன், புலிகள் புதிய நிபந்தனைகளை விடுகின்றார்கள், பேச்சுக்கு வராமல் உள்ளார்கள், புலிகள் யுத்த நிறுத்த மீறல்களில் ஈடுபடுகின்றார்கள் என்ற பரப்புரைமூலம் புலிகளைப் பலவீனப் படுத்தலாம், புலிகளின் நற்பெயரைக் கெடுக்கலாம், உலக நாடுகளிடமிருந்து ஆயுதங்களைப் பெற்று, மீண்டும் ஒரு யுத்தத்தை - சமாதானத்துக்கான யுத்தத்தைத் திணிக்கலாம். அமெரிக்கா, இந்தியா போன்ற நாடுகளின் இராணுவ உதவிகளைப் பெறலாம் என்பதுதான் சந்திரிகாவின் நம்பிக்கை.



1956 ஆம் ஆண்டு தொடங்கிய பேரினவாதிகளின் தமிழர்கள் மீதான வன்செயல் முற்றுமுழுதாக, முழு அளவிலான பெரும் வன்செயலாக 1983 ஆம் ஆண்டு முடிவடைந்து விட்டது.

அதற்குப் பின்னர் பேரினவாத வன்செயல் பெரிய அளவில் நடைபெறுவதில்லை. இதற்குக் காரணம் தமிழீழ விடுதலைப் புலிகளின் ஆயுத பலம்தான். ஆயுதமற்றிருந்த வேளையில் தமிழினத்தை ஆயுதங்கள் மூலமும் காடையர்களின் அட்டூழியங்கள் மூலமும் அடக்கிப் பணிய வைக்க முயன்ற பேரினவாதிகள் - தமிழ் மக்கள் ஆயுதம் எடுத்தவுடன் தமது வன்செயல்களைத் தொடர முடியாமல் உள்ளனர்.

1983 ஆம் ஆண்டு அழிந்த சொத்துக்கள், உயிரிழப்புக்களை விட அதிக உயிரிழப்புக்களைச் சொத்து இழப்புக்களை 1990 - 1995 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் தமிழினம் கண்டது. அப்பாவி மக்களின் சொத்துக்கள், காணிகள், வீடுகள் பாதுகாப்பு அரண் என்ற போர்வையில் மாமனும், மருமகளும் ஆட்சி நடத்தியபொழுது அழிந்தமையின் பெறுமதி எத்தனை கோடி? காணிகளின் எல்லைகள் தெரியவில்லை. பல இலட்சம் பெறுமதியான வீடுகள் இருந்த அத்திவாரங்களே இன்று தெரியவல்லை. இவை இராணுவம் பாதுகாப்பு அரண்போட்ட பகுதிகளின் நிலை. பாதுகாப்புப் பிரதேசம் என்ற போர்வையில் எவ்வளவு இடர் மக்களுக்கு. சொந்த வீட்டில் வாழமுடியாத நிலை. சொந்த மண்ணைப் பண்படுத்தி உழைக்கமுடியாத அவலம் இன்றும் தொடர்கிறதே. இதற்கு யார் எப்பொழுது மன்னிப்புக் கேட்பது. யுத்தம் தொடரும் அறிகுறிகளை ஜனாதிபதி காட்டுகின்றாரே, அப்பொழுது ஏற்படும் அவலங்களுக்கு யார் எப்போது மன்னிப்புக் கேட்பது?

மன்னிப்புக் கேட்பதல்ல இன்றைய பிரச்சினை. இன்று தமிழ் மககள் வேண்டுவதெல்லாம் கௌரவமான, சுதந்திரமான வாழ்வே. இதற்கான ஆதரவைத் தமிழ் மக்கள் தேர்தலில் கொடுத்துள்ளனர்.

எனவே உளத்தூய்மையுடன் சந்திரிகா மன்னிப்புக் கேட்பது உண்மையானதல்ல. புலிகளுக்குத் தாமதியாது தன்னாட்சி அதிகாரத்தை வழங்கி, தமிழ் மக்கள் இந்தத் தீவில எல்லாமக்களும் உரிமையுடன் வாழ வழி ஏற்படுத்தவேண்டும்.

□□□

நமது ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanaadu.com

**சிந்தனைக்கு**

*எண்ணித் துணிக கருமம் துணிந்தபின்
எண்ணுவம் என்பது இழுக்கு.*

திருக்குறள்

# நமது நோக்கு

## பேசுவோம், பிரிவோம், சந்திப்போம்; மீண்டும்...

நேற்று முன்தினம் கிளிநொச்சிக்கு வருகைதந்து தமிழீழ விடுதலைப் புலிகளுடன் பேச்சுக்களை நடத்திய நோர்வே வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன், கொழும்பில் அரசாங்க சமாதான செயலகப் பணிப்பாளரைச் சந்தித்து பேசிவிட்டு வந்தபோதும், அவரிடமிருந்து சமாதானப் பேச்சுவார்த்தைகளின் எதிர்கால முன்னெடுப்புத் தொடர்பாக எந்தவித ஆக்கபூர்வமான செய்தியையும் கொண்டுவரவில்லை என்பதை அரசியற்துறைப் பொறுப்பாளர் சு.ப.தமிழ்ச்செல்வன் தெளிவாகக் கூறியுள்ளார்.

சமாதான முயற்சிகளில் நம்பிக்கையீனம் தோன்றி, போர்நிறுத்த மற்றும் புரிந்துணர்வு உடன்பாட்டுக்கும் ஆபத்து ஏற்படக்கூடும் அபாயம் தோன்றியுள்ளநிலையில், நோர்வே வெளியுறவு அமைச்சரின் ஜனாதிபதியுடனான சந்திப்பின்போது முக்கிய விடயங்கள்குறித்து கலந்துரையாடப்பட்டு ஆக்கபூர்வமான முடிவுகள் எதுவும் எடுக்கப்படலாம் என்றும், அம்முடிவுகள் தற்போது ஏற்பட்டுள்ள நெருக்கடியான பதற்ற சூழ்நிலையைத் தவிர்க்க உதவுமென்றும் பல தரப்பினராலும் எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால், அப்படியெதுவும் நிகழவில்லையென்பது ஏமாற்றம் அளிக்கும் விடயமேயாகும்.

விடுதலைப் புலிகளைப் பொறுத்தவரை அவர்கள் மீண்டும் சமாதானப் பேச்சுக்கள் குறித்த, தாம் முன்னர் தெரிவித்த நிலைப்பாட்டில் இன்னமும் உறுதியாக இருப்பதாகத் தெளிவுபடுத்தியுள்ளார்கள்.

ஆனால், அரச தரப்பினர் இன்னமும் தமது நிலைப்பாட்டை எந்த வகையிலும் தெரிவிக்காது தொடர்ந்தும் 'சமாதானப் பேச்சுவார்த்தை' என்ற சொல்லை மட்டுமே பயன்படுத்திக்கொண்டு காலத்தைக் கடத்தநினைக்கிறார்கள் போல் தெரிகிறது. இல்லையேல் கடந்த இரண்டரை ஆண்டுகளாக சமாதான சூழலுக்கு ஆபத்து நேரிடும் கட்டமொன்று உருவாகியுள்ள நிலையிலும் கூட, அது குறித்து சமாதான ஏற்பாடுகளின் அனுசரணையாளர்களுடன் தெளிவாகப் பேசி ஒரு தீர்க்கமான முடிவை எடுத்து பேச்சுவார்த்தைகளை விரைவில் இயல்பான சூழ்நிலையில் தொடர்வதற்கான வழிவகைகள் குறித்து பேசியிருக்கவும் அது தொடர்பான செய்தியை விடுதலைப் புலிகளுக்கு நோர்வே வெளியுறவு அமைச்சருடாக தெரிவித்திருக்கவும் முடியும்.

ஆனால், ஜனாதிபதி அத்தகையதொரு நோக்கத்தை கொண்டிருப்பதாகத் தெரியவில்லை.

எந்த விடயத்திலும் காலங்கடத்தல், காலதாமதப்படுத்தல், தட்டிக்கழித்தல் போன்றவை ஜனாதிபதியின் இயல்பான குணாம்சம் என்பதை அவரது செயற்பாடுகளைக் கூர்ந்து கவனிப்போர் உணரமுடியும்.

முன்னர் அவரது ஆட்சியின் ஆரம்பகாலகட்டத்தில் அதாவது 1995 இல் நடைபெற்ற பேச்சுவார்த்தைகளின்போது இதேபோன்ற அணுகுமுறையைக் கையாண்டே குழப்பினார் என்பதையும் கருத்திற்கொள்ளவேண்டும்.

ஆனால், அன்றைய சமாதான பேச்சுவார்த்தை நடைபெற்ற சூழலுக்கும், இன்றைய சூழலுக்கும் இடையே நிறைய வேறுபாடு உண்டு.

அன்றைய பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்ட வேளையில் அவர் மக்களின் அபரிமிதமான ஆதரவுடன் அதிகாரப் பலமிக்க ஒருவராக, சமாதானத்தை நிலைநிறுத்த மக்களின் ஆணையை முழுமையாகப் பெற்றுக்கொண்ட ஒருவராக விளங்கிய போதும், அவர் சமாதானப் பேச்சுக்களில் நேர்மையாக அர்ப்பணிப்புடன் செயற்படும் விசுவாசியாக இயங்கவில்லை.

எனவே, யுத்தம் தொடர்தல் தவிர்க்கமுடியாததாகி விட்டது. ஆனால், இன்று நிலைமை முற்றிலும் மாறிவிட்டது.

யுத்தத்தில் தோல்விகண்டு, மக்களின் ஆதரவை இழந்து, பேரினவாத மற்றும் சமாதான எதிர்ப்பு சக்திகளுடன் தோழமைபூண்ட நிலையில், பலவீனமான அரசொன்றை அமைத்துள்ள அவரால் சமாதானத்தை முன்னெடுக்கும் துணிச்சலுடன் செயற்படமுடியுமா என்பது சந்தேகமே...

ஆனாலும், அவர் சமாதானத்தைப் பற்றிப் பேசுவதும், அதனை முன்னெடுக்க விரும்புவதுபோல் பாசாங்கு செய்துகொண்டு காலத்தைக் கடத்தி ஆட்சியைத் தக்கவைக்க முயற்சிப்பதும் தவிர்க்கமுடியாத அவசியமாகிவிட்ட நிலையில் அவரால் எத்தகைய தீர்மானத்தையும், தனது நிறைவேற்று அதிகார பலத்தைப் பயன்படுத்திக்கூட, எடுக்கமுடியாதவராகவே இருக்கிறார் என்பதே அவரின் மிகப் பலவீனமாகவும் உள்ளது.

இந்தநிலையில், அவர் தனது தோழமைக் கட்சியினரான சமாதான எதிர்ப்பு சக்திகளை புறந்தள்ளிவிட்டு சமாதானப் பேச்சுக்களை முன்னெடுக்கத் துணிவார் என நினைப்பது அர்த்தமற்ற எதிர்பார்ப்பேயாகும்.

அதேசமயம் இந்தியா, அமெரிக்கா, பாகிஸ்தான் போன்ற நாடுகள் இலங்கையுடன் பாதுகாப்பு உடன்பாடுகளை மேற்கொள்வதும், இராணுவ ஆயுதத்தளபாட உதவிகளை அள்ளி வழங்கிக்கொண்டு சமாதானத்தை வலியுறுத்தும் கோமாளித்தனம், இலங்கையைச் சமாதான வழியில் செல்லத் தூண்டுமா என்ற கேள்வியும் எழவே செய்கிறது.

புரிந்துணர்வு உடன்பாடு மற்றும் போர்நிறுத்த உடன்பாட்டின் முக்கிய அம்சமான இராணுவ சமநிலை பேணல் உடையும்போது, பலமான நிலையில் உள்ள பகுதி சமாதானத்தை நாட விரும்பாது என்ற யதார்த்தத்தையும் உலகம் புரிந்துகொள்ளவேண்டும்.

இந்த நிலையில் தொடரும் இத்தகைய சந்திப்புகள் யாவும்-
பேசுவோம், பிரிவோம், சந்திப்போம் - மீண்டும் பேசுவோம்
- பிரிவோம் சந்திப்போம் -

என்ற தொடர்கதையாகவே இருக்குமேயன்றி, ஆக்கபூர்வ சமாதான முயற்சிகளுக்கு இட்டுச் செல்லாது என்றே எண்ணத் தோன்றுகிறது.

## நாடும் நடப்பும்




### உசன் பகுதியில் படையினர் வசமுள்ள

# குடியிருப்புக்களை விடுவிக்குமாறு கோரி 5 ஆம் திகதி முதல் மறியல் போராட்டம்

(தென்மராட்சி)

தென்மராட்சியின் உசன் பகுதியில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டுள்ள மக்கள் குடியிருப்புக்கள் மற்றும் பாடசாலை மைதானம் என்பவற்றை விடுவிக்கக்கோரி, தொடர்மறியல் போராட்டத்தை முன்னெடுக்கப்போவதாகப் பாதிக்கப்பட்ட மக்கள் சார்பில் அறிவிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான தமது கோரிக்கைகளை வலியுறுத்தும் மகஜர் ஒன்றைத் தென்மராட்சிப் பிரதேச செயலரிடமும், யாழ். மாவட்ட இராணுவ தலைமையிடமும் பாதிக்கப்பட்ட மக்கள் சமர்ப்பித்துள்ளனர்.

தமது கோரிக்கைகள் ஏற்கப்படாவிட்டால், எதிர்வரும் ஓகஸ்ட் 5 ஆம் திகதி முதல் தென்மராட்சிப் பிரதேச செயலகத்தின் பணிகளை முடக்கும் வகையில் தொடர் மறியலில் ஈடுபடப் போவதாகவும் தெரிவித்தனர்.

குடாநாடு படையினரால் கைப்பற்றப்பட்டது முதல், கடந்த 8 வருடங்களுக்கு மேலாக உசன் பகுதியில் சுமார் 19 இற்கும் அதிகமான பொதுமக்களது குடியிருப்புகளிலும், கிராம அபிவிருத்திச் சங்கக் கட்டடம் மற்றும் உசன் இராமநாதன் மகளிர் வித்தியாலயம் மற்றும் பொது இடங்களில் படையினர் நிலைகொண்டுள்ளனர்.

தென்மராட்சியின் முன்னரங்கப்பகுதிகளில் நிலைகொண்டுள்ள இலங்கை இராணுவத்தின் 55 ஆவது படைப்பிரிவின் கட்டளைத் தலைமையகம் இங்கு அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெரும் தொகைப் பணத்தைக் கொடுத்து ஹெல உறுமயவின் ஆதரவைப்பெற முயற்சி

அடுத்தமாதம் கூடவுள்ள நாடாளுமன்றத்தில், அரசு தனது பெரும்பான்மைப் பலத்தை நிரூபிக்கக் கடும் முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது. இதன் ஒரு அங்கமாக ஜாதிக ஹெல உறுமயவின் உயர்மட்ட உறுப்பினர்களுக்குப் பெரும்தொகைப் பணத்தைக் கொடுத்து, அந்தக் கட்சியின் ஆதரவைப் பெற்றுவிட முயற்சிகள் நடைபெறுவதாக இரகசியத் தகவல்கள் கசிந்துள்ளன.

இத்தகைய இரகசிய நடவடிக்கைகளுக்கென முக்கிய அமைச்சர் ஒருவர் தலைமையில், மூன்று முக்கிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் நியமிக்கப்பட்டுள்ளதாகத் தெரியவந்துள்ளது. இவர்கள் ஊடாக ஹெல உறுமய கட்சியின் உயர் மட்டத் தலைவர்களைத் தொடர்புகொண்டு, அதன் ஆதரவைப் பெற்றுவிட ஆளும் கட்சி அதீத முயற்சிகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரியவருகிறது.

இதற்கிடையில், இது குறித்துக் கருத்துக் கூறிய ஹெல உறுமயவின் பிரதம செயலாளர் வண.உடுவே தம்மலோக தேரர், தங்களது கட்சியை ஒரு கருவியாகப் பயன்படுத்தி, எந்தவொரு கட்சியும் சுயலாபம் தேடிக்கொள்வதைத் தாங்கள் அனுமதிக்கப் போவதில்லை என்றும், ஆளும் கட்சிக்குத் தங்களது ஆதரவை வழங்குவது குறித்து எந்த முடிவும் இதுவரை எட்டப்படவில்லை என்றும் தெரிவித்தார்.

இதேவேளை - அரசாங்கம் தமது பெரும்பான்மையை நிருபிப்பதற்காக இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் கட்சியுடனும், பலவித சலுகைகள் குறித்து அலசி ஆராய இன்னுமொரு உயர்மட்ட விசேட குழுவொன்று நியமிக்கப்பட்டு செயலாற்றிவருவதாகவும் தகவல் வெளியாகியுள்ளது.

## ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் இன்று ஆரம்பம்

1996 ஆம் 97 ஆம் ஆண்டு காலப்பகுதிகளில் படையினரால் கைதுசெய்யப்பட்டு, காணமற்போன இளைஞர்கள் சிலரது பெற்றோரால் தாக்கல் செய்யப்பட்டுள்ள ஆட்கொணர்வு மனு மீதான விசாரணைகள் - இன்றும், நாளையும் இடம்பெறவுள்ளது.

அரியாலைப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு காணாமற்போன இளைஞர்கள் சிலர் தொடர்பாக யாழ்.நீதிமன்றத்திலும், தென்மராட்சியில் - கைதடி, நாவற்குழிப் பகுதியில் படையினரால் கைதுசெய்யப்பட்டு, காணாமற்போன இளைஞர்கள் தொடர்பாகச் சாவகச்சேரி நீதிமன்றத்திலும் இடம்பெற்றுவருகின்றன.

குறிப்பாக - கைதடி, நாவற்குழிப் பகுதியில் ஒரு கிராமத்தைச் சேர்ந்த இளைஞர்கள் பலரைக் கைதுசெய்துகொண்டு சென்றதாகக் குற்றஞ்சாட்டப்பட்டு வரும் படை அதிகாரியான துமிந்த ஹெப்பிற்றிகொலாவ - நாளை சாவகச்சேரி நீதிமன்றத்தில் விசாரணைக்காக ஆஜராகலாம் என எதிர்பார்க்கப்படுகின்றது.

தற்போது இராணுவத் தலைமையகத்தில் கடமையாற்றும் இவர், முதலாம் எதிரியாகக் குறிப்பிடப்பட்டுள்ளபோதும், கடந்த 6 மாதங்களாக நீதிமன்றில் ஆஜராகாது இருந்து வந்தார். எனினும் நீதிமன்றில் விசாரணைக்கு ஆஜராகுமாறு சாவகச்சேரி நீதிவான் கடும் உத்தரவொன்றைப் பிறப்பித்துள்ளார்.

## யு.என்.எச்.சி.ஆர். நிறுவனத்தின் மீளாய்வுக் கூட்டம் செயலகத்தில்

(யாழ்ப்பாணம்)

யூ.என்.எச்.சி.ஆரின் பணி மீளாய்வுக் கூட்டம் எதிர்வரும் 30 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.30 மணியளவில் யாழ்.செயலகத்தில் நடைபெறவுள்ளது.

இந்த மீளாய்வுக்குக் கூட்டத்தில் - யாழ்.செயலக அதிகாரிகள், யாழ்.மாவட்டத்திலுள்ள பிரதேச செயலகங்களின் உதவி அரச அதிபர்கள், பிரதேச செயலர்கள், அகதிகளுக்கான ஐ.நா உயர்ஸ்தானிகராலயத்தின் உயர் அதிகாரிகள் உட்படப் பலர் கலந்துகொள்ளவுள்ளார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்தக் கூட்டத்தில், யாழ்.மாவட்டத்தில் யு.என்.எச்.சீ.ஆர் நிறுவத்தால் முன்னெடுக்கப்படவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்தும் ஆராயப்படலாம் என எதிர்பார்க்கப்படுகிறது. (ப)

## திருமலையில் 7 மீனவர் படையினரால் கைது!

(திருகோணமலை)

தடைசெய்யப்பட்ட வலைகளைப் பயன்படுத்தி, மீன்பிடித்த ஏழுபேரைக் கைதுசெய்திருப்பதுடன், அவர்களது கண்ணாடி இழைப் படகு கைப்பற்றப்பட்டதாகவும் படைத்தரப்பு அறிவித்தது.

இந்தச் சம்பவம் திருகோணமலையின் கங்கை கடற்பகுதியில் கடந்த சனிக்கிழமை அதிகாலை இடம்பெற்றது.

கைதுசெய்யப்பட்ட ஏழு மீனவர்களும், அவர்களது படகும் திருகோணமலை நகரப் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டிருப்பதாகவும் - அவர்கள் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுவருவதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

இன்று உலக அகதிகள் தினம்..

# தேசிய விடியலை நோக்கிய பாதையில்... இருளான அகதி வாழ்வு



உலகளாவிய ரீதியில் தேசிய இனங்கள் எல்லாம் தமது அரசுத் தன்மையைப் பெற போராடிக்கொண்டிருக்கின்றன. மேலும் இராணுவ ஆக்கிரமிப்புக்கள், உள்நாட்டு யுத்தக்கள், நவகாலனித்துவம் என்பவற்றால் மக்கள் அகதிகளாகும் தொகை பெருக்கெடுத்து வருகின்றது. மக்கள் தம் உரிமைகளை இழந்து, நிலம், சொத்துக்கள், உடமைகளை விடுத்து இடம் பெயர்ந்து அகதிகளாக வாழ்க்கையை நடாத்திக் கொண்டிருக்கின்றார்கள். சூடான், சோமாலியா, இலங்கை, ஈராக், பலஸ்தீனம், ரூவாண்டா போன்ற நாடுகளில் அகதி மக்களின் மோசமான வாழ்வு பற்றி ஐ.நா. ஸ்தாபனம் பலமுறை எடுத்துக்காட்டி, அவர்களின் வாழ்வு தொடர்பான அபிவிருத்திக்கான விழிப்புணர்வை ஏற்படுத்தி வருகின்றது.



வன்முறை, இனவாதம் மிகுந்த ஆக்கிரமிப்பு - சண்டைகளினால் கொள்ளையடித்தல், பாலியல் வல்லுறவு, சமூக பொருளாதாரக் கட்டமைப்புக்கள் சிதைக்கப்படல், அப்பாவிப் பொதுமக்களைத் தாக்கி அழித்தல், அவர்களுடைய மனித உரிமை மீறல் போன்ற கொடுமைகள் மேற்குறிப்பிட்ட நாடுகளில் நிகழ்ந்து வருகின்றன. இவற்றுக்கான முக்கிய காரணங்கள் பற்றிக் கருத்துத் தெரிவித்த ஐ.நா. அதிகாரி ஒருவர் பின்வருமாறு கூறினார். பெரும்பாலான நாடுகளில் சண்டை நடைபெறுவதற்கான காரணங்கள் காலனித்துவ அந்நியர் ஆட்சிகள் முடிந்தபின் வல்லரசுகளால் மேற்கொள்ளப்பட்ட பிரித்தாளும், செயற்கைத்தனமான தூண்டுதல்கள், ஆயுத விற்பனை, பேரினவாதங்கள், மதவாதங்கள் என்பவையாகவே உள்ளன" எனத் தெரிவிக்கின்றார்.



## அகதி வாழ்வு

அகதிகளாக வெளியேறி மக்கள் பொது இடங்கள், பாடசாலைகள், அகதி முகாம்களில் தற்காலிகமாக வாழ வேண்டிய சூழல் ஏற்படுகின்றது. இந்த நிலை பல வருடங்கள் நீடிக்கலாம். அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச் செய்து கொடுப்பது அரசாங்கங்களினதும் அரசசார்பற்ற நிறுவனங்களினதும் சர்வதேசத்தொண்டு நிறுவனங்களினதும் கடமையாகும். ஆனாலும் கூட இவை அனைத்தும் தமது கடமையைச் சரியாகச் செய்கின்றனவா என்பவை பற்றிய நெருக்கடிகால முகாமைத்துவ ஆய்வு முடிவுகள் எல்லாம் கேள்விக் குறிகளாகவே உள்ளன.

**அகதிகளாக வெளியேறி மக்கள் பொது இடங்கள், பாடசாலைகள், அகதி முகாம்களில் தற்காலிகமாக வாழவேண்டிய சூழல் ஏற்படுகின்றது. இந்தநிலை பலவருடங்கள் நீடிக்கலாம். அவர்களுக்கான அடிப்படை வசதிகளைச்செய்து கொடுப்பது அரசாங்கங்களினதும் அரச சார்பற்ற நிறுவனங்களினதும் சர்வதேசத் தொண்டு நிறுவனங்களினதும் கடமையாகும். ஆனாலும் கூட இவை அனைத்தும் தமது கடமையைச் சரியாகச் செய்கின்றனவா என்பவை பற்றிய நெருக்கடி காலமுகாமைத்துவ ஆய்வு முடிவுகள் எல்லாம் கேள்விக் குறிகளாகவே உள்ளன.**

அகதியான மக்களுக்கு மனிதாபிமான உதவிகளைச் செய்பவர்களின் முதல் வேலைகளாக அவர்களின் உணவு, தண்ணீர், குடியிருப்பு, உடல் நலக்கவனிப்பு, உடை முதலியவற்றுக்கு முக்கியத்துவம் அளிக்கவேண்டும். தொடர்ந்து அவர்களின் கல்வி முன்னெடுக்கப்படவேண்டும். உலகளாவிய ரீதியில் ஆய்வு செய்யப்பட்ட தகவல்களின்படி பெரும்பாலான அகதி முகாம்கள் அடிப்படை வசதிகள் அற்று, போதைப்பொருள் பாவனை, பொருத்தமற்ற ஆண்-பெண் உறவுகள், கலாசாரச் சீரழிவுகள், பண்பாட்டு அழிப்புக்கள் நிகழும் இடங்களாகவுள்ளன. இதுகூட குறித்த மக்களின் பண்பாட்டு, இனத்துவ அடையாளங்களை அழிப்பதாகவுள்ளது. இந்த நிலைக்கு எதிர் நிலையிலும், புரட்சிகரமான அரசியல் விடுதலை நோக்கிய பாதைகளின் கருவூலங்களாகவும் தென்னாபிரிக்க அகதி முகாம்கள் திகழ்ந்துள்ளன. இன்றைய கறுப்பின மக்களின் விடுதலைக்கு இவை வழிகாட்டின.

## மறுவாழ்வு

பழைய அனுபவங்களில் இருந்து எம்மில் பலரும் மற்றும் அகதி முகாம்கள் நிறைந்த நாடுகளில் உள்ளவர்களும், பாடங்களைக் கற்கத் தயாராக இல்லை என்பதையே அவசர காலத்தின் போதுள்ள மோசமான நிலைமைகள் புலப்படுத்துகின்றன. அகதிகளுக்கான மறுவாழ்வு நடவடிக்கைகள் சூழல்நிலைமைகளுக்கு ஏற்ப முறையாகத்திட்டமிட்டு நடைமுறைப்படுத்த வேண்டும். மறுவாழ்வளிக்கும் தொண்டு சேவை செய்வோர் அவசர மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்கு, நெருக்கடி மற்றும் அபிவிருத்தி முகாமைத்துவ உத்திகள், நுட்பங்களைப் பிரயோகிக்கப் பயிற்றுவிக்கப்படவேண்டும்.

மற்றும் நிவாரண வேலைகள் அகதி முகாம்களில் துரிதமாக நடைபெற எல்லோருக்கும் சமூக சேவையுணர்வு மிக அவசியம். மேலும் அகதிகள் நிவாரணத்தினூடாகத் தங்கி வாழ்தலை விடுத்து படிப்படியாக சுயமுயற்சி, கூட்டுறவு உற்பத்தி முறைமைகளினூடு தொழில்களைச் செய்யும் ஊக்குவிப்புக்கள் வழங்கப்படவேண்டும். இவற்றுக்கெல்லாம் அபிவிருத்திசார் முகாமைத்துவ வழிகாட்டல், விழிப்புணர்வுச் செயற்திட்டங்களை முறையாக நடைமுறைப்படுத்த வேண்டியுள்ளது. அகதிமுகாம்களில் இருப்போரைப் படிப்படியாக மீளக்குடியமர்த்தல் அல்லது புதிய குடியிருப்புக்களில் வாழவைத்தல் அடுத்தகட்டமாக மேற்கொள்ளவேண்டும்.

## இருள் வாழ்வுக்கு ஒளி கல்வி

அகதி முகாம் வாழ்வு, நிச்சயமற்ற, தறி கெட்டுப்போன சூழ்நிலைகள், குற்றச்செயல்கள், களவு, போதைப்பொருள், தீயநடத்தைகளுக்கு பிள்ளைகள் போக நிறையவே சந்தர்ப்பங்கள் உண்டு. இதைத்தடுத்து புதிய சூழ்நிலைகளுக்கு ஏற்ப சரிவர நடந்துகொள்ள பெரியோர்களுக்கும், பிள்ளைகளுக்கும் கல்வியறிவை வழங்கி வழிகாட்டவேண்டும். நெருக்கடியான, நிலைமைகளைச் சமாளிக்கவும் பாதிக்கப்பட்டவர்களை உளத்தாக்கங்களில் இருந்து விடுவிக்கவும் விரைவான கல்வித் திட்டமொன்றை எல்லா அகதி முகாம்களிலும் நடைமுறைப்படுத்த வேண்டும்.

இதற்கு ஒரு உதாரணமாக சோமாலியாவில் யுனெஸ்கோ உலக நிறுவனம் வகுத்த ஆசிரியர் பயன்பாட்டு முறையைக் கூறலாம். இதன்படி ஆரம்பக்கல்வி பெறவேண்டிய பிள்ளைகளுக்கு அகதி முகாம்களுக்குச்சென்று, நடமாடும் வகுப்புக்கள் ஏற்பாடு செய்யப்பட்டன. பாடங்களோ, தேர்வுகளோ இன்றி முதற்கட்டமாக எண்ணும் - எழுத்தும் - சுற்றாடலும் கற்பிக்கப்பட்டன. பயிற்சிப் புத்தகங்கள், கொப்பிகள் வழிகாட்டிகள் மொழி - எண் விளையாட்டுக்கள் ஒப்படைகள் வழங்கப்பட்டன. குறிப்பிட்ட காலத்தின் பின் 2ஆம், 3ஆம் நிலைகளில் முறைசார் பாடவிதானம் கற்பிப்பதற்குச் சந்தர்ப்பம் அளிக்கப்பட்டது.

வன்முறைகள் யுத்த அழிவுகள், கொடுமைகளைப்பார்த்து விட்டு வந்த பிள்ளைகளுக்கு உணர்வதிர்ச்சி இருப்பதைக் கண்டறிய ஆசிரியர்களுக்குப்பயிற்சி அளிக்கப்பட்டது. பொருள் இழப்பு, உற்றார் பெற்றோர் இழப்பு, இடம் பெயர்தல், அச்சம் ஆகியவை பிள்ளைகளின் மனதைப்பாதிக்காமல், நிலைமையைச் சமாளிக்கும் பக்குவத்தை ஆசிரியர்கள் உண்டாக்கினர். இந்த அனுபவம் கொசோவோ அல்பேனியா, மசிடோனியா அகதிகளின் அபிவிருத்திக்கான நிலை மாற்றத்துக்கு வழிகளைக்காட்டின.

எமது மண்ணிலும் இன்றும் அகதி முகாம்கள் உள்ளன. பலர் தமது சொந்த இடங்களைக் கைவிட்டு, இடம் பெயர்ந்து வாழ்கிறார்கள். இவ்வாறான நிலையிலுள்ளபெரும்பாலான மாணவர்கள் பாடசாலைகளிலிருந்து இடைவிலகியுள்ளனர். உளப்பிரச்சினைகளுக்கு உள்ளாகியிருக்கின்றனர். பாடசாலைக்குச் சென்றும், படிக்காமல் சும்மா இருந்துவிட்டு வருகின்றனர். இவர்களின் நிலைகளை மாற்ற அவசரகால நிலை அடிப்படையில் புதிய செயற்திட்டங்களை முன்னெடுக்க வேண்டியுள்ளது. பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரி, ஆசிரிய கலாசாலை, தொழில்நுட்பக் கல்லூரி மாணவர்கள் மேற்குறிப்பிட்ட பிரச்சினைகளைத் தீர்க்க புதிய செயற்திட்டங்களை சிறிய அளவிலிருந்து மேற்கொள்ளலாம். தேசத்தின் எதிர்காலப் பிரச்சினைகளைத் தீர்க்க, புதிய தேசத்தின் எதிர்காலப் பிரஜைகள் சமநிலை ஆளுமை கொண்ட நாட்டுப்பற்றாளர்களாக உருவாக்க புதிய துணிகரமான விழிப்புணர்வுச் செயற்திட்டங்களின் தேவைகள் பெருகியுள்ளன. ♦

---

வணிக அறிவியல் பகுதி I

# உலக வர்த்தக சந்தையையும் கிராமிய சந்தைகளையும் ஒரு பெட்டிக்குள் அடக்கிவிட்டுள்ள மின் வணிகம்

எஸ்.ஜெயா

வணிகம் என்பது தகவல், உற்பத்திப் பொருட்கள், சேவைகள் போன்றவற்றைத் தருகின்ற, விற்கின்ற அல்லது வாங்குகின்ற வர்த்தக முறையாகும்.

தகவலானது எந்த ஒரு வர்த்தக நடைமுறைக்கும் முக்கியமானது. இது கணினிகளுக்கிடையில் இலத்திரன் முறையில் மாற்றப்பட்டு, இணையம்மூலம் வணிகம் நடைபெறுவதை மின் வணிகம் என அழைக்கப்படுகின்றது.

**இதில் மூன்று முக்கிய நிலைகள் உள்ளன.**

**1. விளம்பரம் செய்தல் அல்லது தேடுதல்.**

**2. முற்பதிவு செய்தல் அல்லது பணம் செலுத்துதல்.**

**3. பொருளை விநியோகம் செய்தல்.**

இணையத்துடன் இணைந்த மின் வணிகமானது, குறைந்த முதலீடாகக் கருதப்படுவதுடன், வளர்ந்து வரும் தொழிநுட்பத்துக்கேற்ப உற்பத்திப் பொருட்களின் தரமும், அதன் தொழில்நுட்பமும் உயர்வடைவதற்கான ஊக்கியாகவும் தொழிற்படுகிறது.

உலகத்தோடு சேர்ந்து வியாபாரம் செய்யவும், உலக தர நிர்ணயம் செய்யவும் வழிவகுக்கின்றது. மேலும் வியாபாரப் போட்டியின் காரணமாக புதிய புதிய தொழில் நுட்பங்களை அமுல்படுத்துவதிலும், அதற்கு ஈடு கொடுக்கும் வகையிலும் தொழிற்சாலைகள் இருந்தால் மட்டுமே வியாபார உலகில் நிலைத்து நிற்கமுடியும்.

இன்றைய அதிநவீன தகவல் தொழில்நுட்பமானது, தொழிற்சாலைகளில் புகுத்தப்பட்டு, வியாபாரத்தின் உற்பத்தியைப் பெருக்கவும், பொருட்களின் விலையைக் குறைத்து - தரத்தை அதிகரிக்கவும் உதவுகின்றது.

மின்வணிகத்தினூடாக தேவையான பொருளை, தேவையான நேரத்தில் குறிப்பிட்ட வியாபாரியிடமிருந்து, இருப்பிடத்திலிருந்து கொண்டே பெறக்கூடியதாகவுள்ளது.

இந்த வணிகத்தில் வாங்கும் பொருட்களின் தரம், உத்தரவாதம், வியாபார நம்பிக்கை, பொருட்பாதுகாப்பு போன்றவற்றை வாடிக்கையாளர் பெறுவது மட்டுமன்றி, வீண செலவையும், தாமதத்தையும் தவிர்க்கலாம்.

வணிக நேர்மை, வாங்குபவர் நம்பகத்தன்மை காணப்படுவதால், வியாபாரிகள் நுகர்வோரிடமிருந்து நன்மதிப்பைப் பெறுவதோடு, வாடிக்கையாளர் அல்லது நுகர்வோரின் நிறைகள், குறைகள், திருப்தி, ஆலோசனைகள் போன்றவற்றைத் தெரிந்து-அவற்றுக்கேற்ப உற்பத்தியாளர்கள் தங்கள் உற்பத்திப் பொருட்களையும், சேவைகளையும் சிறந்த முறையில் வழங்கமுடியும்.

இவ்வாறான வணிக நடவடிக்கைகளில் ஈடுபடும் வர்த்தகர்களும், நுகர்வோரும் தமது பணக் கொடுக்கல், வாங்கல்களை மின் கொடுப்பனவு (E-Payments) முறைமூலம் மேற்கொள்கின்றனர். இங்கு இதற்காக வரவு அட்டை (Debit Card), மாற்றீட்டு அட்டை (Switch Card), செலவு அட்டை (Credit Card) என்பன பயன்படுகின்றன.

இதில் சில பிரதிகூலங்களும் உண்டு. இந்த அட்டைகள் திருடப்படலாம் அல்லது போலிகள் பயன்படுத்தப்படலாம். மேலும் மக்கள் அதிகம் செலவு செய்வதையும் ஊக்கப்படுத்தலாம். இத்தோடு, மின்வணிகப் பொருட் கொள்வனவானது சில வேளைகளில் நேரடியாகச் சந்தையில் கிடைக்கும் பெறுமதியைக் காட்டிலும் அதிகமாகலாம்.

உதாரணத்துக்கு இந்தியாவில் உள்ள ஒரு புடவைக்கடையில் எமக்குத் தேவையான நவீன வடிவமைப்புள்ள புடவைகளை மின் வணிகத்தினூடாகக் கொள்வனவு செய்கின்றபோது, அவை எம்மை வந்தடைகின்றபோது பொதி செய்தல், மற்றும் பொதி நகர்த்தல், கட்டணங்கள் எல்லாம் உள்ளடங்குகின்றபோது, அந்தப் பொருள்களுக்கான விலை ஒப்பீட்டளவில் வெளிச்சந்தையில் மலிவாகக் கிடைக்கலாம்.

இது சுண்டங்காய் காப்பணம் சுமைகூலி முக்காப்பணம் என்ற நிலையினையே தோற்றுவித்துவிடும்.

மின்வணிக முறைகளில பின்வருவன குறிப்பிடத்தக்கன.

i. பி ரு பி ($B_2B$)-(Business to Business)
ii. சி ரு பி($C_2B$)-(Customers to Business)
iii. பி ரு சி($B_2C$)-(Business to Customers)
iv. சி ரு பி($C_2C$)-(Customers to Customers)
v. ஐ.பி (I.P)- (Interanet Procurement)

$B_2B$:

இந்த வணிக முறையானது ஒரு வியாபாரி சக வியாபாரியுடன் தொடர்பு கொள்ளும் முறையாகும். இவை இணையம் மூலம் நடைபெறுகின்றன. இந்த முறையானது Extranet பயன்பாடாகக் கருதப்படுகின்றது. இதில் அனுமதிக்கப்பட்ட, குறிப்பிட்ட வியாபாரிகள் மட்டுமே ஒரு பொருளைப்பற்றியும், வியாபாரத் தகவல்களைப்பற்றியும் நிறுவனத்திடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். இங்கு திட்டமிட்ட 'கிறடிட்' விதி முறைகளின் கீழ் பணம் செலுத்தப்படுகின்றது.

$C_2B$:

இந்த வணிக முறையில் வாடிக்கையாளர், வர்த்தகர்களோடு தொடர்பு கொள்ளும் நிலையாகும். வாடிக்கையாளர் ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்களுக்குத் தேவையான பொருட்களை இந்த மின்வணிக வகை அலைப்பக்கத்தில் (Website) கண்டுகொள்ளமுடியும். இங்கு Credit Card மூலமாக பொருள் கொள்வனவு செய்யக்கூடியதாக உள்ளதுடன், நுகர்வோர் விதிமுறையில்லாது உபயோகிக்க வழிமுறைகளும் தரப்பட்டுள்ளன.

$B_2C$:

இங்கு வர்த்தகர்கள் வாடிக்கையாளர்களோடு தொடர்புகொண்டு, வர்த்தகர்கள் ஒவ்வொருவரும் தனித்தனியாக தங்களது வாடிக்கையாளர்களுக்குத் தேவையான பொருட்களை மின்வணிகம் செய்தலாகும்.

(தொடரும்)


என் குடும்ப ஆரோக்கியமும், சுவையான
சமையலும் தான் எனக்கு முக்கியம்...
அதனால் தான் எங்கள் மண்ணில்
உருவாகும் அயடின் கலந்த ஆனையிறவு
கறி உப்பைப் பாவிக்கின்றேன்.
உப்பு உற்பத்தி நிறுவனம்
THE ORGANIZATION FOR PRODUCTION OF SALT
உப்பு உற்பத்தி நிறுவனம்.
A9 சாலை,
ஆனையிறவு.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# பேச்சுக்கான நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம்களின் யோசனைகளும் இடம்பெற கோருகிறார் ஹக்கீம்

## கொட்டாவ சம்பவத்தில்

# உயிரிழந்த அறுவரின் சடலங்கள் அடையாளம் காணப்பட்டன

(கொழும்பு)

அத்துருகிரிய கொட்டாவவில் வீடொன்றில் வைத்து கருணா அணியைச் சேர்ந்தவர்கள் உட்பட எட்டுப் பேர் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தில் இதுவரை ஆறுபேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர் என -

மேல்மாகாண பொலிஸ் பிரிவிற்கான பொலிஸ் மா அதிபர் கே.பி. பத்திரன தெரிவித்தார்.

இறந்தவர்களில் ஏனைய இருவரினது சடலங்களை அடையாளம் காண்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

உயிரிழந்த கருணா அணியைச் சேர்ந்தவர்களில் ஒருவரோ அல்லது இருவர் இவர்களை சுட்டுக்கொன்றுவிட்டு, தப்பிச் சென்றுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவருகிறது.

கொலைச் சம்பவம் இடம்பெற்ற வீட்டின் உட்பகுதியிலும், வெளிப் பகுதியிலும் மேற்கொண்ட விசாரணைகளின் மூலம் சுட்டுக்கொன்றவர்கள் எனக் கருதப்படும் சிலரின் கைவிரல் அடையாளங்கள் கண்டு பிடிக்கப்பட்டுள்ளதாகவும் அவர் மேலும் குறிப்பிட்டார்.

# மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் காலை இழந்தார்

உரும்பிராய் மூன்று கோயிலடிப் பகுதியில் மிதிவெடியில் சிக்கிய குடும்பஸ்தர் ஒருவர் இடது காலை பாதத்துடன் இழந்துள்ளார். அத்துடன், கைகள் மற்றும் நெஞ்சுப் பகுதியிலும் காயங்களுக்கு உள்ளானார்.

நேற்றுக்காலை இடம்பெற்ற இந்தச் சம்பவத்தில் செல்லர் சதானந்தசோதி (வயது - 38) என்பவரே காலை இழந்து யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டார். ஆட்களற்ற காணியில் விறகு வெட்டச் சென்ற சமயமே இந்தச் சம்பவம் இடம்பெற்றதாகத் தெரியவருகிறது. (111)

## நோர்வேயின் முக்கிய...

ஆரம்பிப்பதற்கான முயற்சியாக, நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் தற்போது இலங்கைக்கான விஜயம் ஒன்றைமேற்கொண்டுள்ளார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை மாலை இலங்கை வந்தடைந்த விதார் ஹெல்கிசன் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல்துறைப்பொறுப்பாளர் சு.ப. தமிழ்ச்செல்வன் தலைமையிலான குழுவினரை நேற்றுமுன்தினம் கிளிநொச்சியில் சந்தித்திருந்தார்.

ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவை சந்தித்து, சமாதானப் பேச்சுக்களில் ஜனாதிபதியின் நிலைப்பாட்டை அறிந்துகொண்ட நோர்வேயின் பிரதி வெளிவிவகார அமைச்சர், பிரதமர் மகிந்த ராஜபக்ஷ, எதிர்க்கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க, சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீம் மற்றும் வெளிவிவகார அமைச்சர் லக்ஸ்மன் கதிர்காமர் ஆகியோருடன் பேச்சுக்களை நடத்துவார்.

இச் சந்திப்புக்களின் பின்னர் தமிழீழ விடுதலைப்புலிகளின் அரசியல் ஆலோசகரும் தத்துவாசிரியருமான கலாநிதி அன்ரன் பாலசிங்கத்தை எதிர்வரும் வெள்ளிக்கிழமை சந்தித்துப் பேச்சுவார்த்தை நடத்துவதற்கு லண்டன் புறப்படமுன்னர் அவர் முக்கியமான அறிவித்தல் ஒன்றை வெளியிடுவார் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதுப்பொலிவுடன் யாழ்ப்பாணத்தில்
FedEx
Express
விரைவானது பாதுகாப்பானது நம்பகமானது
இப்பொழுது உலகின் எப்பாகத்திற்கும்
விரைவாக பொதிகள், கடிதங்களை
அனுப்பிட நீங்கள் நாடவேண்டிய
ஒரே ஸ்தாபனம்
THIRUMURUGAN COM NET
Opposite Diolag phone shop
259,கே.கே.எஸ் றோட்,
யாழ்ப்பாணம்.
T.P: 021 222 7835
Fax:021 222 7836
E.mail:thirumurugan5@lycosmail.com
பலநோக்கு கூ. ச. முன்பாக
46, ஆடியபாதம் வீதி,
திருநெல்வேலி,
யாழ்ப்பாணம்
T.P: 021 222 7560
Fax:021 222 7310

சமாதானப் பேச்சுக்களை மீண்டும் ஆரம்பிக்க நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம் மக்கள் சார்பாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள யோசனைகள் தொடர்பாக கலந்துரையாடுவது, மிக முக்கியமானது என்று சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

நேற்றுக்காலை நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடனான சந்திப்பின் பின்னரே ரவூப் ஹக்கீம் இதனைத் தெரிவித்தார்.

அரசாங்கமும் விடுதலைப் புலிகளும் சமாதானப் பேச்சுவார்த்தைகளை முன்னெடுப்பதற்கு இதயசுத்தியுடன் செயற்பட வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

சமாதானப் பேச்சுவார்த்தைகளுக்கான நிகழ்ச்சி நிரலில் முஸ்லிம் மக்களின் பிரதிநிதிகளின் ஆலோசனை உள்ளடக்கப்பட வேண்டும் என்றும் தாங்கள் வலியுறுத்தியதாக அவர் கூறினார்.

குறிப்பாக முஸ்லிம் மக்களுடைய பாதுகாப்பு தொடர்பாக அவதானத்துடன் செயற்பட வேண்டிய தன் அவசியம் குறித்து, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சரிடம் சுட்டிக்காட்டியதாக சிறிலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவர் ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

இந்த சந்திப்பு கொழும்பிலுள்ள முஸ்லிம் காங்கிரஸ் தலைவர் ரவூப் ஹக்கீமின் இல்லத்தில் நடைபெற்றது.

இந்த சந்திப்பில், சிறிலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் தலைவர் ரவூப் ஹக்கீம், நாடாளுமன்ற உறுப்பினர்களான பசீர் சேகுதாவுத், எஸ்.நிஜாமுடீன், கே.எஸ்..ீ.பாய்ஸ் கட்சியின் செயலாளர் ஹசன் அலி ஆகியோர் உட்பட அரசியல் உயர்பீட உறுப்பினர்களும் கலந்து கொண்டனர்.

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனுடன் இலங்கைக்கான நோர்வேத் தூதுவர் ஹான்ஸ் பிரட்ஸ்கரும் கலந்துகொண்டார். நேற்றுக் காலை 11 மணிக்கு ஆரம்பமான இந்த சந்திப்பு நண்பகல் 12 மணிவரை தொடர்ந்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

### பட்டதாரிகளுக்கான அவசர கலந்துரையாடல்

உயர் தேசிய கணக்கியல், உயர் தேசிய வர்த்தகப் பட்டதாரிகளுக்கான கலந்துரையாடல் நாளை காலை 10 மணிக்கு உயர் தொழில் நுட்ப நிறுவன பிரதான மண்டபத்தில் நடைபெறவுள்ளதால், இந்தக் கலந்துரையாடலில் பட்டம்பெற்று வெளியேறிய அனைத்துப்பட்டதாரிகளும் பங்குபற்றி பெயரினை உறுதிப்படுத்திக் கொள்வதன் மூலம் பட்டதாரிகளுக்கு அரசாங்கத்துறையில் வழங்குவதற்கு ஏற்பாடு செய்யப்பட்ட வேலை வாய்ப்பிணைப் பெற்றுக்கொள்வதற்கு இலகுவாக இருக்கும் என யாழ்.மாவட்ட உயர் தேசிய கணக்கியல் வர்த்தக பட்டதாரிகள் சங்கம் தெரிவித்தது.

## வடக்கு - கிழக்கு...

விடுதலைப் புலிகளின் பிரதேசத்தில் முன்னெடுக்கப்படும் வேலைத் திட்டங்களுக்கு நேரடியாக நிதியுதவி வழங்குவதில்லை. அனைத்து நிதியுதவிகளும் மத்திய அரசின் ஊடாகவே வழங்கப்படுகிறது.

உலகவங்கி - அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுக்கின்ற போது அனைவருடனும் கலந்துரையாடுவதற்கு தமக்கு அதிகாரம் இருப்பதாகவும் அவர் சுட்டிக்காட்டினார்.

## மட்டுவில்...

மேலும் தெரியவருவதாவது -

பலாலி கிழக்கிலிருந்து இடம் பெயர்ந்து அச்சுவேலி பத்தமேனியில் வசித்துவந்த சிவலோகநாதன் ராஜ்ரூபன் (வயது-22) மற்றும் அவரது சகோதரரான சிவலோகநாதன் ராஜ்குமார் (வயது -21)ஆகியோர் மோட்டார் சைக்கிளில் சாவகச்சேரியை நோக்கிச் சென்று கொண்டிருந்தனர். அப்போது எதிரேவந்த லொறி இவர்கள் மீது மோதியதில் சிவலோகநாதன் ராஜ்ரூபன் சம்பவ இடத்திலேயே பலியானார்.

காயமடைந்த இவரது சகோதரன் ராஜ்குமார் சிகிச்சைக்காக சாவகச்சேரி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுப் பின்னர் மேலதிக சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டார்.

குறிப்பிட்ட லொறிச் சாரதியைக் கைதுசெய்த சாவகச்சேரிப் பொலிஸார் லொறியையும் தடுத்துவைத்துள்ளனர். (லெ,29,34,111)

## கொழும்பு நகரின் பாதுகாப்பை...

இந்தச் சம்பவத்தில் அவர்கள் தொடர்புபட்டுள்ளதாகக் கூறுவதற்கு சுயாதீன சாட்சிகள் தேவை.

புலிகள் கொழும்புக்குள் ஊடுருவிய பின்னர் அவர்களைக் கட்டுப் படுத்துவது முடியாத காரியம். எனவே நகருக்குள் ஊடுருவ முன்னர் அவர்களைத் தடுப்பதே சிறந்த வழியாகும்.

இந்த வகையில் நகரின் பாதுகாப்பில் நிரந்தரமற்ற திடீர் சோதனைச்சாவடிகள் அமைக்கப்படவுள்ளன. இடைநிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள்களில் ஆயுதங்களுடன் நடமாடும் படைப் பிரிவு மீண்டும் செயற்படவுள்ளது.

கடவுச்சீட்டு மற்றும் ஆள் அடையாள அட்டை திணைக்களங்களின் நடவடிக்கைகள் தீவிரமாகக் கண் காணிக்கபடவுள்ளன.

இலங்கையில் ஊழல் மிகுந்த இரண்டு நிறுவனங்கள் என இவை இரண்டையும் கூறவெட்கமாக இருந்தாலும் கூறவேண்டிய கட்டாயம் ஏற்பட்டிருக்கிறது.

கொட்டாவ பகுதியில் இடம்பெற்ற எட்டுப் பேரின் படுகொலைகளுக்கும் இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்கும் தொடர்புகள் இல்லை.

சம்பவத்தின்போது கொல்லப்பட்ட நீல் தம்மிக்க திலீப்குமார என்பவர் புல்டோசர் வாகனத்தின் சாரதியாவார். அவர் கட்டட ஒப்பந்தங்கள் ஏதும் மேற்கொள்கின்றபோது கருணாவுடன் தொடர்புகொண்டு, அதனடிப் படையிலேயே கொட்டாவ இல்லத்திலும் தங்கியிருக்க வேண்டுமென படையினர் கருதுகின்றனர்.

தம்மிக கருணா அணியின் வாகனச் சாரதியாக இருந்திருக்கலாம்.

தம்மிக என்பவர் கொல்லப்பட்டிருக்கிறார் என்ற தகவல் வெளியான போதும், அவர் உண்மையிலேயே பெரும்பான்மை இனத்தவரா? பெரும்பான்மை இனத்தின் பெயரைக் கொண்ட தமிழரா என்பது குறித்து விசாரணை நடைபெற்றுக்கொண்டிருக்கிறது.

ஆனால், அந்த நபருக்கும் இராணுவத்துக்கும் எதுவித தொடர்புமில்லை. அவர் இராணுவத்தில் இருந திருக்கவுமில்லை. சாகும்போது அவருக்கும் இராணுவத்துக்கும் எந்த வித தொடர்புமில்லை.

கொட்டாவ பகுதியில் கொல்லப்பட்ட ஏனைய ஏழு பேரில் இருவர் இன்னும் அடையாளம் காணப்படவில்லை.

இந்தச் சம்பவம் இடம்பெறப் போவதாக புலனாய்வுப் பிரிவினர் முன்கூட்டியே கண்டறியவில்லை என அவர்கள் மீது குற்றம் சுமத்துவது யதார்த்தமாகாது.

அனைத்து விடயங்களிலும் புலனாய்வுப் பிரிவினர் அவ்வாறு செயற்படமுடியுமானால் அமெரிக்காவில் இரட்டைக் கோபுரத் தாக்குதல் மற்றும் இஸ்ரேலிய பிரதமரின் கொலை என்பவற்றைத் தடுத்திருக்கலாம்.

கொழும்பு நகரின் பாதுகாப்பு நிலைமை குறித்து பரிசீலனை செய்வதற்காக பாதுகாப்பு அமைச்சின் செயலாளர், பொதுமக்கள் மற்றும் முப்படைகளின் அதிகாரிகள், பொலிஸ் அதிகாரிகள் கலந்துகொள்ளும் கூட்டம் வாராந்தம் நடத்தப்படவுள்ளது.

அண்மையில் கொள்ளுப்பிட்டியில் இடம்பெற்ற தற்கொலைக் குண்டுத் தாக்குதல் மற்றும் கொட்டாவவில் கருணா குழுவைச் சேர்ந்த எட்டுப்பேர் சுட்டுக்கொல்லப்பட்ட தாக்குதல் அதிகரிப்பதைத் தொடர்ந்தே-கொழும்பு நகரின் பாதுகாப்பு குறித்து மீளாய்வு செய்யும் கூட்டங்களை நடத்த முடிவு செய்யப்பட்டது எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

## இடைக்கால நிர்வாக...

அடித்தளமாக அரசு ஏற்றாலே, பேச்சுவார்த்தையில் தாம் கலந்து கொள்ள முடியுமென விடுதலைப் புலிகள் தெரிவித்தனர்.

ஐக்கிய இலங்கைக்குள் தற்போதைய பிரச்சினைக்குப் பொருத்தமான தீர்வைக் காண்பதற்குத் தமது அரசாங்கம் மிகவும் விருப்பார்வத்துடன் இருப்பதாகவும், அதற்கு விடுதலைப் புலிகள் சமர்ப்பித்த இடைக் காலத் திட்டவரைபின் அடிப்படையில் பேச்சுவார்த்தை நடத்தத் தயாராக இருப்பதாகவும் ஹெல்கிசனிடம் ஜனாதிபதி தெரிவித்ததாக ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

எனவே, இந்த அடிப்படையில் விடுதலைப் புலிகளும் மீளப் பேச்சுவார்த்தைக்கு வருவார்களென அரசாங்கம் நம்புகின்றது. அத்துடன், அண்மைக்கால வன்செயல்கள் போர் நிறுத்தஒப்பந்தத்திற்கு முரணானவையென ஜனாதிபதி வலியுறுத்திக் கூறியதாகவும் ஜனாதிபதி செயலகம் தெரிவித்தது.

## ஜே.வி.பி...

ஜனாதிபதி சந்திரிகாவின் இந்த நடவடிக்கை குறித்து, ஆட்சேபம் தெரிவித்து ஜே.வி.பியின் செயலாளர் ரில்வின் சில்வா ஜனாதிபதி சந்திரிகாவுக்கு கடிதம் ஒன்றை அனுப்பிவைத்தார்.

இந்த கடிதத்தில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணி அரசாங்கத்தில் அங்கம் வகிக்கும் கட்சி என்ற வகையில், தம்மிடம் எந்தவித கலந்தாலோசனையும் செய்யாமல் - விவசாய அமைச்சின் வசமிருந்த பொறுப்புக்களை மைத்திரிபால சிறிசேனாவின் வசம் ஒப்படைத் திருப்பது யதார்த்தமற்ற செயல் என்று குறிப்பிடப்பட்டது. (01)




இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 28.07.2004 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.